Regd. No. M. 4900. 16-பக்கங்கள். தனிப்பிரதி விலை 0-2-0.

நமது இயக்க அச்சு வேலைகள் அனைத்துக்கும் சிறந்த இடம்
★
தமிழன் பிரஸ், ஈரோடு.

# குடி அரசு

ESTD. 1924

நமது இயக்கப் புத்தகங்கள் அனைத்தும் கிடைக்குமிடம்
★
நாதன் கம்பெனி ஈரோடு.

வருட சந்தா உள்நாடு ரூ. 7-0-0. வெளிநாடு ரூ. 9-0-0.

மாலை 21 ஈரோடு 28-2-1948 சனிக்கிழமை மலர் 25.

மனிதனை யோக்கியனாக நடத்த முடியாத கடவுளும், வேத புராணங்களும், நமக்கேன்? காசு வாங்கிக்கொண்டு மன்னிப்புக் கொடுத்து விட்டு மேலும் மேலும் நம்மை அக்கிரமம் செய்யத் தூண்டும் கடவுள் ஏன் நமக்கிருக்க வேண்டும்?

—பெரியார்.

இன்றைய கடவுள் ஒரு ஒத்தைக் காசுக்குக்கூடப் பிரயோஜனம் இல்லை. இன்றைய மதம் ஒரு கடுகளவுக்குக்கூட நமக்குப் பிரயோஜனமில்லை. நமக்கு வேறு மதம், வேறு கடவுள், வேறு கட்டளை வேண்டும்.

—பெரியார்.

## 1948 MARCH. 1948

| SUN | MON | TUE | WED | THU | FRI | SAT |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | 31 | | | |

பெண்கள் பகுதி:

# வாருங்கள் தோழியர்களே!

[தோழியர் டி. மங்கையர்க்கரசி]

★

கடந்த இரண்டு வாரங்களாக குடி அரசை மிக மிக ஆவலோடு எதிர்பார்த்து மிகவும் ஏமாற்றமடைந்தேன். பெண்கள் பகுதியை இவ்வளவு அசிரத்தையாக, பெண்களாகிய நாம்விட்டு வைப்பது திராவிடப் பெண்ணினத்திற்கே தாங்கமுடியாத நஷ்டம் என்று என்னைப்போலவே நீங்களும் அறிவீர்கள். ஆனால் ஒவ்வொரு தோழியர்களும் நமது சக்திக்கேற்றபடி கொஞ்சம் அறிவுரைகளை வழங்க முயற்சிக்க மறந்து விடுகிறோம். [இக்கட்டுரை 2 வாரங்களுக்கு முன்னால் எழுதியனுப்பப்பட்டது. ஆர்.]

வாரந்தவறாமல் குடிஅரசில் நமது இனப்பெண்களாகிய நீங்கள், அரிய பெரிய அறிவுரைகளை அள்ளி அள்ளி வீசுவீர்கள்! அதைப்பார்த்து பிற இனப் பெண்கள் தலைகுனிவார்கள், என்று பெருமிதம் அடைந்து கொண்டிருந்த எனக்கு இப்போது நமது அலட்சியத்தைக் கண்டு நம்மையும் நமது குடிஅரசையும் எவ்வளவு ஏளனம் செய்வார்கள், என்று நினைக்கையில், உண்மையில் வெட்கித் தலைகுனிய வேண்டியதாய் இருக்கிறது. போகட்டும் தயவு செய்து இனியாவது, சோம்பலை விட்டுவிட்டு நாம் முன்னேறவழி வகுப்பீர்களா?

முன்னேற்றம் என்றால் என்ன? சில பெண்கள் முன்னேற்ற மென்றால் புதுமாதிரியாக தலை சீவுவதும், தோள்களில் இடிக்கும் வண்ணம் நீண்ட லோலாக் போட்டுக்கொள்வதும், சுமை நகை போட்டுக்கொண்டு, நிமிடத்திற்கொரு புதுப்புடவையாக உடுத்திக் கொள்வதுந்தான்! என்று கருதுகிறார்கள். இது நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதாகும். இதெல்லாம் பகட்டான வேலை என்பதை நாம் உணர வேண்டும். ஒவ்வொரு பெண்களும் மனத்தில்—உள்ளத்தில் முன்னேற்றமடையவேண்டும். உள்ளத்தில் முன்னேற்றமடைவதென்றால் ஒன்றும் கஷ்டமான காரியமல்ல! எதையும் சிந்திக்கும் இயல்பு மட்டும் கொஞ்சம் வேண்டும். அதாவது நமது பெண்கள்—குறிப்பாக கிராமத்திலுள்ள திராவிடப் பெண்கள் பொருள் உண்டாகும் என்ற மூடநம்பிக்கையுடன், ஆடி, தை மாதங்களில் செவ்வாப்பிள்ளையார் கும்பிடுகிறோம். இப்படி வருடத்திற்கிருமுறை செவ்வாபிள்ளையார் கும்பிட்டும், நமது பொருளாதாரத்தில் எவ்வித மாறுதலும் ஏற்படாமல் நித்திய தரித்திரர்களாகவே இருக்கிறோம். ஆனால், செவ்வாப்பிள்ளையார் என்றால், இன்னதென்றே அறியாத அமெரிக்கா நாட்டிலே, பிறநாடுகளுக்குக்கூட, வலிய கடன் கொடுக்கும் அளவுக்கு பொருள் உண்டாக்கக் காரணம் என்ன என்பதைப் பற்றி நாம் சிந்திக்க ஆரம்பித்தால், இந்த 48ம் வருடத்திலும்கூட செவ்வாப் பிள்ளையார் என்ற ஒரு அறிவீனமான கொள்கைக்கு தலைவணங்குவோமா? மேலும் வெள்ளிக்கிழமையில் அழுக்குத்துணிகளை, சலவைக்குப் போட்டால், லெட்சுமி போய்விடுவாள் என்கிறோம். லெட்சுமி அழுக்கில் தானா இருக்கிறாள்? இதை சிந்தித்தோமா? வருடந் தவறாமல் சரசுவதி பூஜை கொண்டாடும் நாம் ஏன் கல்வியில்லாமல், பலபெண்கள் தற்குறிகளாக இருக்கிறோம்? அயல் நாட்டுப் பெண்கள் படித்து முன்னேறி, விஞ்ஞானத் துறையில்கூட, ஆண்களோடு சரிசமமாக போட்டியிடுகிறார்களே ஏன் என்று யோசித்துப் பார்த்தால், நமது மூடத்தனத்திற்கு நாமே தலை குனியவேண்டாமா?

பெண்கள் நகை மாட்டிக் கொள்ளவும் அழகான புடவைகள் உடுத்திக் கொள்ளவுந்தானா உபயோகப்பட வேண்டும்? ஆண்களைவிட பெண்கள் தான் அறிவில் உயர்ந்தவர்கள் என்பது ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்த உண்மை. அப்படி இருந்தும் இன்று நாம் இகழப்படுகிறோம். மேலும் பண்டையப் பெண்மணிகள், எவ்வளவோ அரிய பெரிய காரியத்தை சாதித்ததாக சரித்திரம் கூறுகிறது. மற்றும், புராணங்களை நம்ப மறுக்கும் என்பகுத்தறிவுத் தோழியர்களே! மன்னியுங்கள். இந்த இடத்தில் மட்டும் கொஞ்சம் நம்புங்கள். அதாவது இராமாயண காலத்திலே, தேவர்களென்போர், யாகங்கள் என்ற பெயரால், எரியும் நெருப்பில் ஆடுகளையும், மாடுகளையும் போட்டு துடிக்கத் துடிக்க கொன்று தின்னும் கொடிய காரியத்தைத் தடுக்க, இராவணப் பெரியாரின் அத்தையான தாடகை அம்மையார் தன் உயிரையே கொடுக்கவில்லையா? அப்படிப்பட்ட வீரப் பெண்மணிகளின் வழி வந்த நாம், இவ்வளவு கோழைகளாக இருக்கக் காரணம் என்ன?

எல்லாம் ஆரியர் வைத்த சட்ட திட்டத்திற்கு நாம் அடிமைப்பட்டதாலல்லவா? இனியும் நாம் வாளா இருக்கலாமா? ஆகவே ஒவ்வொரு தோழியர்களும், தங்களது வைதீக வாழ்க்கைக்கு இறுதிப்புள்ளி வைத்துவிட்டுப் பெண்கள் முன்னேற்ற சங்கங்கள் அமைக்க முன்வாருங்கள்!

கிராமங்களிலும் மற்ற இடங்களிலும் உள்ள தோழியர்களெல்லாம் அந்தந்த ஊரில் திராவிடர் மாதர் சங்கம் நிறுவவேண்டும். சங்கத்தின் வேலைகளைக் கீழ்க்கண்ட முறையில் அமைக்கவேண்டும். இயக்கப் பெண்களாகிய நாம் முதலில் கவனிக்கவேண்டிய முக்கிய விஷயம் பெருவாரியான திராவிடப் பெண்களை உறுப்பினராக சேர்க்கவேண்டியது தான்! பிறகு தான் நாம் வேலைகளைக் கவனிக்க வேண்டும். முதலில் கவனிக்கவேண்டியது எவை?

எத்தனையோ காலமாகப் பெண்கள் சமுதாயம் நசுக்கப்பட்டுக் கிடந்துவிட்டதால் அவர்களைலேசில் திருத்த இயலாது என்பதை ஒப்புக்கொண்டு தான் தீரவேண்டும். அதற்காக நாம் கொஞ்சம் கஷ்டபட்டு அவர்கள் மனத்திலுள்ள மாசுகளை நீக்கி அர்த்தமற்ற ஆரியக்கொள்கைகளை அவர்கள் மனத்திலிருந்து அகற்றவேண்டும். இதைச்செய்வதற்கு நமது அன்பையும் அறிவையுந்தான் உபயோகப்படுத்தவேண்டும். (தியாகந்தான் நமது பரம்பரைச் சொத்தாயிற்றே) நம்மால் திருந்தப்பெற்ற தோழியர்களே, மற்றப்பெண்களுக்கும் அந்தப் பாடத்தைக் கற்றுக்கொடுக்கும் அளவிற்கு, நாம் வழங்கிய அறிவுரைகள், அவர்கள் மனத்தில் ஊடுருவிப்பாயும் தன்மை உள்ளதாக இருக்கவேண்டும். நமது சங்கத்துப் பெண்களிடையே சிறிது தொகை வசூலித்து, நூல் நிலையம் ஒன்று ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். நமது சங்கத்திலேயே, நூல் நிலையம் ஏற்படுத்திக்கொண்டோமானால், பேப்பர்களுக்குப் பிறர் கையை எதிர்பார்க்க வேண்டிய அவசியம் இல்லை அல்லவா? மேலும் வயது சென்ற தாய்மார்களுக்குக் கல்வி (முதியோர் கல்வி) போதிப்பதற்கும் நமது இயக்கப் பெண்கள் முன்வரவேண்டும். இவர்களுக்குக் கல்வி போதித்து, சாஸ்திர சம்பிரதாயங்களின் ஊழல்களை அம்பலப்படுத்தினால் அவர்களின் அறிவுக்கண் திறக்கப்படுவதுமன்னியில், நமது இனத்தில் அறிவுக்கண் அடைபட்டுக் கிடக்கும் பெருவாரியான முதியோர்களையும் திருத்த வழி ஏற்படும். பாடுபட்டால் பலன் நிச்சயம் உண்டு. உதாரணமாக என் அனுபவத்தில் ஒன்று கூறுகிறேன் கேளுங்கள். கடந்த ஆறுவருடங்களாக நான் இடைவிடாது செய்த சுயமரியாதை பிரசாரத்தால், (வீட்டில்தான்!) எழுபது வயதாகும் விதந்துவான என் அத்தை கடந்த நான்கு வருடங்களாக மனமாற்றமடைந்து, புண்ணிய க்ஷேத்திரம் என்று சொல்லப்படும் கும்பகோணம், மகாமகக் குளத்தில் ஸ்நானம்

(தொடர்ச்சி 15-ம் பக்கம்)

ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

# குற்றத்தைச் செய்தவன் குற்றவாளியல்ல, குற்றத்தைச் சொன்னவன் குற்றவாளி. இதுதான் இந்து தருமம்.

(கைவல்யம்)

★

சுயமரியாதைக்காரர்கள் கடவுளைக் குற்றம் சொல்லுகிறார்கள், கடவுளை இல்லை என்கிறார்கள், திட்டுகிறார்கள், என்று சொல்லுகிறார்கள். இவ்விதமான குற்றங்களைச் சொல்லிச் ஜனங்களைத் தூண்டிக் கோபத்தையுண்டாக்கிச் சன சமூகங்களுக்கு நன்மை செய்ய வந்த பல சங்கங்களுக்கும், தனி மனிதர்களுக்கும் கஷ்டங்களை உண்டாக்கி அழித்தே போட்டார்கள். அது போலவே சுயமரியாதைச் சங்கத்தையும் அழித்துவிடப் பார்த்தார்கள், இனியும் பார்க்கிறார்கள். சுயமரியாதைச் சங்கங்கள் அழியாதது; அழிக்க முடியாதது. ஏனெனில் சுயமரியாதைச் சங்கம் சொல்லுவது எல்லோரும் ஒத்துக்கொள்ளக் கூடியது. எல்லோருக்கும் வேண்டியது. உலகப் பொதுக் கடவுளுக்கோ, உலகப் பொதுவிதிக்கோ மாறுபட்டதுமன்று. கடவுள் எல்லோருக்கும் பொதுவானவர். அவருடைய சிருஷ்டி, நியமம் எல்லோருக்கும் பொது. ஒரு சாதிக்கு மட்டும் கடவுள் சொந்தமல்ல. கடவுளையடையவோ, மோட்சம் போகவோ ஒரு சாதிக்காரன் காலில், இன்னொரு சாதிக்காரன் விழுந்து காணிக்கை வைத்தால் தான் கடவுள் கடாட்சிப்பார் என்பதையும், பிறப்பிலிருந்து இறப்புவரையிலும் எல்லாவற்றிக்கும் ஒரு ஜாதிக்காரனுக்கே பலகாரம் பால் பாயசத்தோடு ஒண்ண்ரை வயிறு சாப்பாடு போட்டுத் தெட்சணை கொடுத்துத் தெருத்திண்ணையில் புரளவிட்டுச் சீட்டாடி ஊர்வம்பு பேசித் திரிய விட்டால் தான், சர்வ சம்பத்தும் வரும் கடவுளும் திருப்திப்படுவார் என்கிறவைகள் அனைத்தையும் குற்றம் சொல்லுகிறோம். இவைகளுக்கெல்லாம் காரணமாகப் பிராமணர்களிருக்கிறார்கள். அவர்கள் எழுதிய ஏடுகளிருக்கின்றன. அதற்கு வேண்டிய தந்திர அபிநய ஏற்பாடுகளிருக்கின்றன. இத்தனைக்கும் கடவுள் சொன்ன சாஸ்திரங்களிருக்கின்றனவென்கிறார்கள்.

ஒரு சாதிக்கு ஒரு நீதி. ஒரு சாதிக்கு ஒரு சாதி வைப்பாட்டி மகன், அடிமை என்று எழுதி இவர்கள் கையில் கொடுத்துக் கல்வியைத் தடுத்து; அறிவைக் கெடுத்து, உலகத்தை ஏமாற்றிப் பிழையுங்கள் என்று எந்தக் கடவுளாவது சொல்லுமா? அப்படியும் ஒருகடவுளிருக்குமா? பிராமணர்கள் சொல்லுகிறபடி அப்படி ஒரு கடவுளிருந்தால் அது கடவுள் தன்மைக்குப் பொருந்துமா? அப்படி, ஒரு கடவுள் இருக்காது என்றால், கடவுளைக்குற்றம் சொல்லுகிறார்கள், கடவுளை இல்லை என்கிறார்கள் என்று தூற்றுகிறார்கள். மனித நியாயத்திற்கும், புத்திக்கும் ஒத்துவராத அக்கிரமங்களைக் கடவுள் சொன்னார் என்று பொய்யும் புரட்டும் எழுதிவைத்துக்கொண்டு, ஏமாற்றுவது குற்றமல்லவாம். கடவுள் நியாயத்திற்கும் நீதிக்கும் ஒத்துவராததைச் சொல்லமாட்டார்: அப்படிச் சொல்வது கடவுளுமாகாது என்று சொல்லுவது குற்றமாம். இது நியாயமா? என்று கேட்டவர்கள் அழிக்கப்பட்டார்கள். பழய இந்து ராஜாங்க காலத்தில் நீதியையும், நியாயத்தையும், பாத்தியதைகளையும் பிராமணர்கள் தங்கள் பக்கமே எழுதிவைத்துக்கொண்டு, அவைகளெல்லாம் கடவுள் சொன்ன சாஸ்திரங்களென்று சன சமூகங்களை ஏமாற்றிப் பகுத்தறிவின் பாதையைக் . கொடுந் தண்டணையால் தடுத்து அழித்து, தாங்கள்பூஜ்ஜியதராய்எல்லாவற்றிலும், சுகமாய் வாழ்ந்தார்கள். இந்து ராஜாங்கமொழிந்து ஏற்பட்ட முகலாய அரசாட்சியில், மொகலாயருக்கு வேண்டியபடி நடந்து, பழைய கொடுங்கோலையே நடத்தினார்கள். முகலாய ராஜ்ஜியம் போய் ஆங்கிலேய ராஜ்ஜியம் வந்து ஆங்கிலக் கிர்மினல் சட்டமே இங்கும் வந்தால், பழைய கொடுந்தண்டனைகள் மாறிற்றே அல்லாமல், விவகாரங்களெல்லாம் அப்படியேயிருந்தது. பிராமணர்களும் மத சம்பிரதாயங்களில் பிராமணர்களைப் பின்பற்றும் சூத்திர உயர்ந்த ஜாதிகளில் சிலரும், உள்நாட்டு உத்தியோகஸ்தர்களாகவிருந்ததால், பழைய நீதியும் நியாயமும் அப்படியே இருந்தது. இப்பொழுது எல்லாருக்கும் நியாயம் தெரிகிறது. பகுத்தறிவும் பரவுகிறது. கூப்பாடும் அதிகம் கேட்கிறது. என்றாலும் காற்றுக்கு மரம் அசைகிறதே ஒழிய ஆணி வேரும் சல்லி வேரும் அப்படியே இருக்கிறது. அதற்குள் பார்ப்பார்கள் திராவிடக் கழகத்தாரின் தலைகளை இப்பொழுதே கிள்ளி எறியுங்கள் என்று இராஜாங்கத்திற்கு ஆலோசனை சொல்கிறார்களாம்.

கவிவீர் தாராநாத்தாகூர் சொன்னபடி ஒவ்வொரு காலத்திலும் மனுஷிய ஜாதி கற்றுக்கொள்ளும் பெரிய உண்மைகளாகிய செல்வம், உலகத்து நாடுகள் அனைத்திலும் யாதேனுமொரு ரூபத்தில் பரவுதல் இன்றி யமையாதது. இந்தச் செல்வத்தைச் சுமப்போர், பரப்புதலிலே லோபம் காட்டுவது நம்பிக்கைத் துரோகமாகும். அப்போது அவர்கள் தெய்வ சிந்தைக்கு விரோதம் செய்து, துக்கத்தைப்பரப்புகிறார்கள் எனினும், அவர்கள் ஒளியை ஒரு மரக்காலுக்குள்ளே மூடிவைத்தல் சாத்தியப்படாது. அவர்கள் கொடுக்கும்படி ஆக்கினை பெற்றதைக் கொடுத்தே தீரவேண்டும். தானத்தின் கர்த்தாகாலம். அவர்கள் கேவலம் காலத்தின் கருவிகள். அவர்கள் தமது சரித்திரத்தில் ஒரு பகுதிக்கு ஒளிப்பக்கத்தையும் மற்றொரு பகுதிக்கு இருட்பக்கத்தையும் திருப்புகையிலே அசம்பாவிதம் ஜனிக்கிறது. ஆனால் அவர்கள் குணத்தில் ஓரம்சம் மற்றோரம்சத்தை வஞ்சிக்க, எக்காலத்திலும் இயலாது. பெரிய இங்கிலீஷ்காரனைச் சுற்றிச் சின்ன இங்கிலீஷ்காரன் சுயநலக்கோட்டை கட்டிக்கொண்டே போவதை உணர்ந்த, பெரிய இங்கிலீஷ்காரன் ஆபத்தும், துயரமுமேவிளையுமென்று உணர்ந்த பின்னே நமக்குச் சுயராஜ்ஜியம் கொடுத்தார்கள். பல சமயங்களில் தன் லாப முன்யோசனைகளெல்லாம் கவிழ்ந்து, ஒரு சிறிய தடையில் இடறித், தலைகீழாகக் கவிழ்ந்து, முடிவு திடீரென்று வந்துவிடும்.

ஒருவன் தோளில் இன்னொருவன் ஏறிக்கொண்டு, அங்கேபோ! இங்கே வா! குனி! நிமிர்! உட்கார்' எழுந்திரு! என்று அதிகாரத்தோடு சவாரி செய்கிறான். தூக்கிச் சுமப்பவனுக்குத் தோள் வலிக்கிறது. கஷ்டப்படுகிறான். அவமானமாயிருக்கிறது. எந்தத் தேசத்திலும் இந்த நியமமில்லையே என்பதைத் தெரிகிறான். தெரிந்து அப்பா! நீ என்தோளிலிருந்து, சவாரி செய்தது போதும்! இனி என்னால் சுமக்க முடியாது! அதனால் எனக்கு வந்த லாபமும் போதும்! உன் உயர்ந்த சாதி விஸ்வாசமும், உன்சாஸ்திர நம்பிக்கையும், உன் கடவுள் பிரசாதமும், உன் கையிலிருக்கும் மோட்சலோக அடைப்பும், திறப்பும் வேண்டாம்! என்று சுமப்பவன் சொன்னால் அது குற்றம். சுமக்கும் சாதிக்கும், ஏறிச் சவாரிசெய்கிற சாதிக்கும் வித்தியாசத்தை உண்டாக்கிச் சாதித் துவேஷத்தை உண்டாக்கி வகுப்புவாதத்தைப் பரப்புகிறான். ஆனதால் உடனே இந்த வகுப்புவாதத்தைத் தடுக்கவேண்டும். இல்லையேல் நாங்கள் ஏறிச் சவாரி செய்வதால் உண்டாகும் சுக சவுகரியங்களெல்லாம் தடைப்படும். ஆனதால் உடனே இராஜாங்கம் இதைக் கவனித்து இந்துக் கலாச்சாரத்தையும்

[தொடர்ச்சி 14ம் பக்கம்]

உண்மை தழுவிய கற்பனை.

# பித்தம் தெளிய :: :: மருந்தொன்று......

(சு. திராவிடமணி)

☆

“பித்தம் தெளிய மருந்தொன்றிருக்குது” என்றநந்தனார் பாடலைக் கேட்டுக் கொண்டேயிருந்த மணிக்குத் திடீரென ஓர் யோசனை தோன்றிற்று. பாடிக்கொண்டிருந்த வானொலிப் பெட்டியை அடைத்துவிட்டு யோசிக்கத் தொடங்கினான்.

அவன் சொந்த ஊரினின்றும் படிப்பதற்காகப் பெரிய குளத்திற்கு வந்து ஆறு மாதங்கள் ஆயின. அவனது உடலில் ஓடிக்கொண்டிருந்த் திராவிட ரத்தம் அவனைப் பல வழிகளிலும் ஆலோசனை செய்யத் தூண்டிற்று. காரணம், தன் சொந்த ஊரில் தேசியத் தோழர்கள் செய்த அட்டூழியம் தான். தேசியப் பித்தம் பிடித்தலைந்த அவர்களுக்கு என்ன மருந்து கொடுக்கலாம் என்று தான் பல நாட்களாக யோசித்துக்கொண்டிருந்தான். அன்றையத் தினம் பாடலைக் கேட்டதும் மணிக்கு ஆற்றங்கரை ஞாபகத்திற்கு வந்தது.

பெரிய குளத்தில் மணி அடிக்கடி தேசியத் தோழர்களிடமும், பொதுவுடைமைத் தோழர்களிடமும் ஆரியர்-திராவிடர் பிரச்சினையை விவாதிப்பது வழக்கம். பிராமணர்கள் தான் ஆரியர்கள் என்று மணி சொல்வதைக் கேட்ட தேசியத் தோழர் சாதிப்பிரிவினை கூடாது என்பார். பொவுடைமைத் தோழர் ஓர் சிறு கூட்டத்தாரைப் பிரித்துக் காட்டுவது சரியல்ல என்பார். இவர்களுக்குச் சரியான மருந்து கொடுக்கவேண்டும் என்று எண்ணிக் கொண்டிருந்தபோது தான் மணி நந்தனார் பாடலைக் கேட்டான்.

மறுநாள் அவ்விரு தோழர்களையும் ஆற்றங்கரைக்கு வந்தால், பித்தம் தெளிய மருந்து கொடுப்பதாகச்சொன்னான் மணி. அவர்கள் ‘ஆற்றங்கரையிலே அழகிய மரங்கள் இரு மருங்கும் இருக்கும்; கிளைகளிலே பறவைகள் ஆடும், பாடும்; வானரங்கள் விளையாடும், பளிங்குபோன்ற நீர் சலசலவென ஓடும்; என்றுதானே நீ சொல்லப் போகிறாய்’ என்று மணியைக் கேலி செய்தனர். அதற்கு மணி தேசியப் பித்தம் பிடித்துள்ள உங்களுக்கு ஆற்றங்கரை ஆரிய—திராவிடப் பிரச்சினையைத் தீர்க்கும் என்று சொல்லி அவர்களை ஆற்றங்கரைக்கு வரும்படி கேட்டுக்கொண்டான்.

அதிகாலையில் ஆற்றங்கரையில் மணியும் அவனது தோழர்களும் காணப்பட்டனர். தோழர்கள் மணியைப்பார்த்துப் ‘பித்தம் தெளியும் மருந்து எங்கேயப்பா இருக்கிறது’ என்று கிண்டலாகக் கேட்டனர். மணி அவர்களுக்கு ஆற்றைச் சுட்டிக் காட்டினான்.

ஆற்றிலே பலதிறப்பட்ட மக்கள்—முதியோர்— இளைஞர்—சிறியோர்—தாய்மார்கள் ஆகியோர் நீராடிக்கொண்டிருந்தனர். மதத்தின் பேரால் பிரிக்கப்பட்ட நால் வருணத்தார்களும் நீராடிக்கொண்டிருந்தனர். மனிதப் பிறவியில் தாழ்த்தப்பட்ட மக்களும் நீராடிக்கொண்டிருந்தனர். நீராடி முடிந்ததும் அனைவரும் தத்தம் வழிபாடுகளைச் செய்துவிட்டு வீடு திரும்பினர். தோழர்களின் பித்தம் இதற்குள் தெளிந்திருக்காது என்று மணி தனக்குள் கூறிக்கொண்டான்.

நீராடின மக்களில் பெரும்பாலோர் வழிபாடு முடித்து வீடு திரும்பியும், ஒரு சிறு கூட்டத்தார் மட்டும் வழிபாடு செய்து கொண்டு நிற்பதைக் கண்டார்கள். மற்றவர்களெல்லாம் திருநீறு பூசி இரு கரம் கூப்பித் தொழுதவுடன் சென்று விட்டனர். ஆனால் உச்சிக்குடுமிக் கூட்டம் மட்டும் அங்கமெல்லாம் நீறு பூசிக்கொண்டு நிற்பதைக் கண்ட, தோழர்கள் “பித்தம் தெளியும் மருந்து எங்கப்பா இருக்கிறது” என்று மறுபடியும் மணியைக் கிண்டல் செய்தனர். “இன்னும் சில நிமிடத்தில் மருந்து கிடைக்கும்பார்” என்று மணி தனக்குள் சொல்லிக் கொண்டு மௌனமாக இருந்தான். பிறகு அக் கூட்டத்தினர் ஒவ்வொருவரும் இரு கையாலும் தண்ணீர் மொண்டு மும்முறை வானத்தை நோக்கி வீசினர். மந்திரத்தை முணமுணத்துக்கொண்டு கைகூப்பினர். பின் ஒரு கையில்சிறிது நீர் எடுத்துக்குடிப்பதைப் போன்ற பாசாங்கு செய்து மந்திரம் சொல்லிக்கொண்டு மூக்கைத் தொட்டு, தலையைச் சுற்றிப் பல முறை கைகூப்பித் தொழுதனர். இதற்குள் பதினைந்து நிமிடங்கள் கடந்து விட்டன. காத்துக்கொண்டிருந்த தோழர்கள் ஒன்றும் புரியாதவர்களாய் மறுபடி “மருந்து எங்கே” என்று மணியைக் கேட்டனர்.

மணி மருந்து இருக்குமிடத்தைக் காட்டினான். அவர்களை வேத காலத்தில் கொண்டு வந்து நிறுத்தினான். உச்சிக்குடுமிக் கூட்டத்தாரின் நாகரிகத்தை அவர்கள் கண்டனர். ரிக், யஜுர், சாம, அதர்வண வேதங்களில் அக்கூட்டத்தாரின் வழிபாட்டு முறைகளைப் படித்தனர். அதே சமயம் சிறிது நேரத்தில் வழிபாட்டை முடித்துச் சென்ற மக்களின் மூதாதையர்களின் காலத்தையும் அவர்களின் மனக்கண்முன் மணி காட்டினான். அவர்கள் அக்கூட்டத்தாரின் நாகரீகத்தையும், வீரத்தையும் தீரத்தையும் கொடையையும் கண்டு ஆனந்தம் கொண்டனர். அக்கூட்டத்தாரின் வழிபாட்டு முறைகளையும் கண்டனர். பித்தம் கொண்டிருந்த தோழர்களுக்கு சிறிது பித்தம் தெளிய ஆரம்பித்தது. முற்றும் தெளியவில்லை. முற்றும் மாறாததால் வருத்தமடைந்த தோழர்கள் மணியின் மீது கோபப் பார்வையைச் செலுத்தினர். மணி சமாதானம் சொல்லி அவர்களை அழைத்துக் கொண்டு கிளம்பினான். மாலையில் மயக்கத்தை முற்றும் மாற்றிவிடுவதாகக் கூறிச் சென்றான் மணி.

மாலை சுமார் 5-30 மணிக்கு, மணி தன் வீட்டை விட்டுப் புறப்பட்டான். வழியில் பித்தம் கொண்ட தோழர்களையும் அழைத்துச் சென்றான். உச்சிக்குடுமி கூட்டத்தார் வாழும் தெருவில் அவர்கள் நடந்து சென்றனர். அத்தெருவிலிருந்து பலர் ஆற்றங்கரையை நோக்கிச் சென்று கொண்டிருந்தனர். நண்பர்களுடன் உரையாடிக் கொண்டே சென்ற மணி ஆற்றங்கரையருகிலிருந்த அரசாங்க வானொலி வெளியில் அமர்ந்தான். வானொலியினின்றும் கிளம்பிய இன்னிசை அலை அலையாக மணியின் செவியில் வந்தடைந்தன. இன்னிசையில் மயங்கிக் கிடந்தான் மணி. அவனுடன் வந்த தோழர்களும் இசையின் இன்பத்தில் ஆழ்ந்து கிடந்தனர்.

இனிய இன்னிசை வெள்ளத்தில் மிதந்து கொண்டிருந்த மணியின் பார்வையை எதிரில் உட்கார்ந்து கொண்டிருந்த ஓர் உருவம் இழுத்தது. அவ்வுருவம் அங்கமெல்லாம் நீறு பூசி ஏதோ

(தொடர்ச்சி 12-ம் பக்கம்)

## இந்து மதத்திற்கே சொந்தம் வருணம்.

# பெரியார் உழைப்பின் பயன்

## இன்று நாம் தார் ரோட்டில் கார் ஓட்டுகிறோம்.

★

ஜன்வரி மாதம் 25 தேதி மாலை 4-மணியிலிருந்தே ஆண்களும், பெண்களும் திராவிடநாடு பகுத்தறிவு நிலைய நான்காவது ஆண்டு விழா நடைபெறும் இடத்திற்கு வந்த வண்ணமிருந்தனர். விழாவிற்கு வருகிறவர்கள் உட்காருவதற்கென நாற்காலிகள், பெஞ்சுகள், பாய்விரிப்புகள் முதலான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. தலைவர்கள் வீற்றிருக்க அலங்காரமான மேடை அமைக்கப்பட்டிருந்தது. எலெக்ட்ரிக் விளக்கு வசதியும், ஒலிபெருக்கியும் வைக்கப்பட்டிருந்தன.

தாராவியிலும், அதற்குச் சமீபத்திலும் உள்ள பல சங்கப் பிரதிநிதிகளும் வந்திருந்தனர். பம்பாய்க் கப்பற் படையைச் சேர்ந்த தோழர்கள் பலர் தோழர் ராவணதாஸ் தலைமையில் வந்து அணிவகுத்து இருப்பதுபோல் காட்சியளித்தனர்.

ஷை விழாவில் கலந்து கொண்ட சங்கங்களாவன:—

தெ. இ. ஆ. தி. மகாஜன சங்கம், தென்னிந்திய பூர்வீக அய்க்கிய சங்கம், தெ. இ. ஆ. தி. வாலிபர் கழகம், பத்தமடை ஆ. தி. மகாஜன சீர்திருத்த சங்கம், நாங்குனேரி ஆ. தி. மகாஜன சங்கம், ஆ. தி. சீர்திருத்த சங்கம், பம்பாய் திராவிடர் கழகம், கணேசபுரம் திராவிடர் கழகம், நாடார் மகாஜன சங்கம், இல்லத்தார் சமாஜம், மறவர் மகாஜன சங்கம், மாதுங்கா தமிழ்ச் சங்கம், திருவள்ளுவர் ஆசிரமம், பம்பாய் தோல் வியாபாரிகள் சங்கம், தமிழர்ஸ்போர்ட்ஸ்கிளப், சொக்கலால் ராம்சேட் இலவச வாசகசாலை, இன்னும் சில சங்கங்கள் பெயர் தெரியாமையால் இத்துடன் நிறுத்தினேன்.

தாராவிக்குப் பக்கத்திலுள்ள மாதுங்காவிலிருந்து பல பார்ப்பனத் தோழர்களும் வந்திருந்தனர்.

தோழர் எம். ஆர். ஜம்புநாதன் தலைமை வகித்தார். காரியதரிசி சங்க அறிக்கை வாசித்தார். பிறகு ஜேவியர் கல்லூரி புரோபசர் அவர்களும், பம்பாய் முனிசிபல் ஸ்கூல் கமிட்டி மெம்பர் அவர்களும் ஆங்கிலத்தில் சொற்பொழிவாற்றினார்கள். அதன்பின் பம்பாய் மத்திய திராவிடர் கழகச் செயலாளர் தோழர் பி. தொல்காப்பியன் உணர்ச்சி மிக்க முறையில் "நமது லட்சியம்" என்பது பற்றிப் பேசினார்.

ஷை விழா சிறப்புற நடைபெற வேண்டுமென்று வாழ்த்திக் கடிதமும், தந்தியும் அனுப்பியவைகளைப் படிக்கப்பட்டது. வாழ்த்து அனுப்பியவர்கள்:—

ஈரோடு வைத்திய வள்ளல் ஈ. வே. கிருஷ்ணசாமி, புதுக்கோட்டை முன்னாள் திவான் P. கலிபுல்லா சாயபு, சென்னை V. V. முருகேச பாகவதர், இன்கம்டாக்ஸ் ஆபீசர் K. பொன்னன் B. A., நெல்லை M. தேவதாசன் B. A. B. L., வி. முனுசாமி B. A. B. L., பொன்னி ஆசிரியர், முருகு சுப்பிரமணியம், திருச்சி P. சிவபிச்சை, விருதுநகர் V. V. ராமசாமி, சேலம் கல்லூரி பிரின்ஸ்பால் A. ராமசாமி M. A. L. T., கொழும்பு S. T. சவுரிநாதன், மற்றும் அநேகர்.

கடைசியாக என்னைப் பேசும்படி கட்டளையிட்டார்கள். இவ்விழாவில் அரசியல் விஷயங்களைப் பற்றிப்பேச விரும்பவில்லையென்றும், அந்த நாட்டுப் பிரிவினை பற்றி நாளை மறுதினம் நடக்கவிருக்கும் திராவிடர் கழகக் கூட்டத்தில் பேசுகிறேன் என்றும் சொல்லிவிட்டு, சமுதாயத் துறையில் பெரியார் அவர்கள் செய்து வரும் சேவைகளை அங்குள்ள மக்கள் அனைவருக்கும் புரிகிற மாதிரியில் சாதாரண வழக்கமாய்ப் பேசுகிற நடையில் விளக்கிச்சொன்னேன். நம்மை வகுப்புத்துவேஷி, மதத் துவேஷி, கடவுள் துவேஷி என்று கூறுகிறவர்கள் தங்கள் பித்தலாட்டத்தை மறைக்கச் செய்கிற சூழ்ச்சி என்றும், உண்மையில் நாட்டில் வகுப்பின் பேராலும் மதத்தின் பேராலும், கடவுளின் பேராலும் எவ்வித வேறுபாடும், துவேஷ புத்தியும் இருக்கக்கூடாதென்பதற்காகப் பாடுபடுவதே நமது பகுத்தறிவு இயக்கத்தின் நோக்கம் என்றும், இவைகளை நாம் எடுத்துக்கூறுவதனால் தங்கள் பிழைப்புப் பாதிக்கப்படுகிறவர்களின் உளறல்களுக்காகயாரும் பயப்படவேண்டியதில்லையென்றும், ஆரம்பத்தில் பெரியார் அவர்களுக்கு இந்த சுயநலப் பிழைப்புக்காரர்களால் ஏற்பட்ட தொல்லை, கலாட்டா, கல்வீச்சு, மொட்டைக்கடுதாசிகள் என்பனபோன்றவைகள் எவ்வளவோ இருந்தும் அவர் சற்றும் அஞ்சாது, அயராது தொடர்ந்து பணியாற்றியதின் விளைவே இன்று நாம் தார் ரோட்டில் ஒடுகிற கார் மாதிரி வெகு சுலபமாக, ஜம்பமாக, அலங்காரமாக விழா நடத்தி—அதிலும் ஒரு பார்ப்பனத் தோழர் தலைமையிலேயே நடத்திக்கொண்டாடுகிறோம் என்றும், இனி மேல்தான் சமுதாய சீர்திருத்த வேலையில் அதிக கவனம் செலுத்த வேண்டிய சந்தர்ப்பம் வந்திருக்கிறதென்றும், எனவே எல்லோரும் பெரியார் அவர்களின் அழைப்பை—கட்டளையை எதிர்பார்த்து இருக்கவேண்டும் என்றும் கூறி முடித்தேன். தலைவர் வெகுவாக என்னை ஆதரித்து முடிவுரை கூறியபின் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு விழா இரவு 10 மணிக்கு இனிது முடிந்தது.



## வருணாச்சிரமமே வகுப்புவெறியின் வித்து.

# தமிழ்மொழியில் மாற்றமாம்!

[மு. ராஜமாணிக்கம்]

★

அகில தமிழர் மகாநாடு ஒன்று அண்மையில் சென்னையில் கூடியதை அன்பர்கள் பலரும் அறிந்திருக்கக்கூடும். ஆட்சிமன்றத்திலிருப்போரிலிருந்து அரசியலினின்று துறவறம் பூண்ட அனைவரும் கூடினார்கள். கூடித் தீர்மானங்கள் சில நிறைவேற்றினார்கள். நிறைவேறாத தீர்மானங்களை வாபசும் வாங்கிக் கொண்டார்கள். அவைகளில் ஒன்று தமிழ் மொழியில் சில மாற்றங்கள். 'தமிழில் உயிர்மெய் எழுத்துக்களின் ஒலிகளைக் குறிக்கும் குறிகள் வெவ்வேறாக இருக்கின்றன. இதனால் அச்சுகளின் எண்ணிக்கை அதிகமாக இருக்கின்றன. குறிகள் (கொம்புகள், கால்கள் ஆகியவை) ஒரு மாதிரியாக்கப்பட்டு தனித்தனியாக எழுதப்பட்டால் அச்சுக்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறையும்; அச்சுக்கோக்கும் இயந்திரத்தில் அச்சுகளின் எண்ணிக்கை குறைந்து துரிதமாகவும், திறமையாகவும் அச்சுக்கோக்க முடியும் என்று விஷயமறிந்தவர்கள் அபிப்பிராயப்படுகின்றனர்' என்பதாகும். இதைப்பரிசீலனை செய்து மூன்று மாதங்களில் அறிக்கையைப் பிரசுரிப்பதற்காக திருவாளர்கள் சோமசுந்தர பாரதியார், ஏ. என். சிவராமன். (தினமணி ஆசிரியர்) சி. ஆர் சீனிவாசன் (சுதேசமித்திரன் ஆசிரியர்) டி. எஸ் சொக்கலிங்கம் (தினசரி ஆசிரியர்) ஆர். கிருஷ்ணமூர்த்தி (கல்கி ஆசிரியர்) ரா. பி. சேதுப்பிள்ளை, அவினாசிலிங்கம் செட்டியார் (கல்விமந்திரி) எஸ். முத்தையா முதலியார், திரு. வி. கலியாணசுந்தர முதலியார் ஆகியோர் அந்தக் கமிட்டியின் அங்கத்தினர்கள். இதில் சி. ஆர். சீனிவாசன் கன்வீனர். இருவருக்கு, இந்த கமிட்டிக்கு மேற் கொண்டு அங்கத்தினர்களை சேர்த்துக் கொள்ளும் அதிகாரமுண்டு, இந்தத்தீர்மானம் நிறைவேற வில்லை. நிறைவேறினாலும் சரி;நிறைவேறாவிட்டாலும் சரி அதுபற்றி நமக்கு அக்கரையில்லை. ஆனால் இந்தத் தீர்மானத்தை அந்த மகாநாட்டில் பிரரேபித்தவரையும், அதற்கென அங்கத்தினர் பட்டியலைத் தயாரித்தவரையும் பார்க்கும் போது எள்ளிநகை யாடுவதைத் தவிரவேறொன்றும் செய்வதற்கில்லை. சுதேசமித்திரன், தினமணி, தினசரி, கல்கி போன்ற பத்திராசிரியர்கள் தங்கள் பத்திரிக்கைகளை வெளியிடுவதற்கு, அச்சகங்களில் ஞ, ஊ, கெள, போன்ற எழுத்துக்களினால் ஏற்படும் கஷ்டங்களைப் போக்கிக் கொள்வதற்காக அக்ராகரக் கும்பலினால் கொண்டு வரப்பட்ட தீர்மானம் என்று சொன்னால் அது மிகையாகாது. ஆனால் இந்த மாறுதலைப்பற்றி நாம் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

தமிழ் வரி வடிவம், ஒலி வடிவம் ஆகிய ஆராய்ச்சியில் சுயமரியாதைக் கழகம் பல ஆண்டுகளுக்கு முன்பே ஈடுபட்டு பல அரிய ஆராய்ச்சி வெளியீடுகளை "குடி அரசு" பதிப்பகத்தார் வெளியிட்டிருக்கின்றனர். அதை 'நடைமுறையிலும் செய்து கொண்டு வருகின்றனர். "விடுதலை" "குடி அரசு" பத்திரிகைகள் அந்த ஆராய்ச்சியின் சிகரங்களாகக் கொள்ளலாம். இன்னும் கூற வேண்டுமானால் "குடி அரசு" காரியாலயத்திலிருந்தும், தமிழன் அச்சகத்திலிருந்தும், "விடுதலை" காரியாலயத்திலிருந்தும் வெளியிடப்படும் சிறு நோட்டீஸ் முதல் பெரிய புத்தகம் வரை மேற் சொன்ன ஆராய்ச்சியின் அடிப்படையிலேயே வெளிப்படுகின்றன. இந்தமுறை பல ஆண்டுகளாகவே கையாளப்பட்டு வருகிறது. சென்ற நான்கு வாரங்களுக்கு முன்புகூட "குடி அரசி"ல் இதுபற்றிய ஆராய்ச்சிக் கட்டுரை தொடர்ந்து இரண்டு வாரங்கள் வெளியிடப்பட்டது. பண்டிதர்கள், பார்ப்பனப் பத்திரிகாசிரியர்கள் கண்களுக்குப் பட்டதோ படவில்லையோ? நாமறியோம். நாம் எழுதியும், பேசியும் வருவதைக் கேலி செய்து விட்டு, அகில தமிழர் மகாநாடு என்று ஒன்று கூட்டப்பட்டதில், தமிழ் மொழியில் சீர்திருத்தம் என்று சொல்லி எப்பொழுது பார்ப்பனப் பத்திரிகாசிரியர்களின் உள்ளத்தில் உதித்ததோ அப்பொழுது, அதை ஒரு தீர்மானமாகக்கொண்டு வந்து, அதற்கென அமைத்த கமிட்டியில் அந்த, உண்மைகளைத் திரித்துக்கூறியே எழுதி வருகின்ற, பார்ப்பனப் பத்திரிகாசிரியர்களையே அங்கத்தினர்களாகக்கொண்ட அந்தக் குழுவை தலைவர் அவர்கள் (மகாநாட்டுத்தலைவர்) அகில தமிழர் மகாநாட்டுக் கூட்டத்தில் பிரரேபிப்பாரானால் இந்த அநியாயத்தை நாம் யாரிடம் சொல்லி அழுவது?

"மாமியார் உடைத்தால் மண்குடம்; மருமகள் உடைத்தால் பொன்குடம்" என்ற பழமொழி தமிழ் நாட்டில் வழங்கி வருவது எல்லோரும் அறிந்ததாகும். அதுபோல் சுயமரியாதைச் சங்கத்தார் கூறுவதையெல்லாம் குறை கூறிவிட்டு, தமக்கு வேண்டியதை மட்டும், தவறற்றது என்று கூறும் பூசுரக்கூட்டம், அகில தமிழர் மகாநாட்டில் தம் கைவரிசையைக் காட்ட முனைந்திருக்கிறது. மக்கள் அந்தக் கூட்டத்திற்குச் சரியான மண்டையடி கொடுத்தனர். தமிழ் மொழியில் மாற்றம் (எழுத்து வடிவில்) வேண்டும் என்றால், அதைச் செய்வதற்குக் கல்கியும், சுதேசமித்திரனும், தினமணியுந்தானா? எலிக்குப் பூனையைக் காவல் வைத்தது போல், தமிழ் மொழியைக் கொலை செய்யும் கலைக் கொலையாளிகளையா? கலையை நிலை செய்யும் பணிக்கு நிறுத்துவது.

தமிழ் மொழியில் திருத்தம் செய்ய அக்ராகர வாசிகளுக்குத்தான் திறமையிருக்கிறது என்ற எண்ணமா? ஒப்புக்கு ச. சோ. பாரதியாரையும், திரு. வி. க. வையும் பட்டியலில் சேர்த்து விட்டு, கல்வி மந்திரியைக் காண்பித்து விட்டு ஏகபோக உரிமை கொண்டாட எண்ணிய அக்ராகரமே! மக்கள் விழித்துக் கொண்டனர் என்பதை மனதிலிறுத்து. விழிப்படைந்த மக்களினத்திலும் ஒரு சில விபீஷணர்கள் உள்ளனர். அவர்களின் மூலம் எதையும் சாதித்து விடலாம் என்று நினைப்பதோ, நினைத்துக் காரியத்திலிறங்க முற்படுவதோ இனிமேல் முடியாது என்று முடிவு கூறுகிறோம். அகில தமிழர்களைக் கூட்டி, தமிழ்நாடு தனியாகப் பிரிய வேண்டும் என்று தீர்மானித்து அதன் முற்போக்குக்

(தொடர்ச்சி 12-ம் பக்கம்)

ரோஜா முத்தையா

# இதைக் கேட்பது வகுப்புத் துவேஷமா?

★

வரி வாங்கிப் பிழைக்கும் அரசு—மக்களின் தன்னரசு என்றாகாது. மக்கள் வேறு! அரசு வேறு! என்ற மண்மூடவேண்டிய—பிரித்துக்காட்டும் நிலையையே உணர்த்தும். பணக்காரன், முதலாளி, பிறவி முதலாளிகளின் துணைக்குத்தான் வரி வாங்கும் அரசு உழைத்து வருகிறதே தவிர—உழைக்க முடியுமே தவிர—பாட்டாளி மகனுக்குத் துணை செய்ய முன் வராது—அதன் இயல்பும் அதுவல்ல.

நம் நாடும் எதிர்காலத்தில் அமைத்துக் கொள்ளப்போகும் அரசியல் முறை இது.

இன்று வரியால் பிழைக்கும் அரசியல் முறையில், பாட்டாளி மக்களையும் அவ் வரிக்கொடுமைக்கு ஆளாக்கும்போது கொடுமை! கொடுமை என்ற கூக்குரல் உண்மையொலியோடு அடிவயிற்றிலிருந்து எழுந்து முழங்கப்படுவதைக் கேட்கிறோம். இக்கொடுமை தொலையவேண்டும் என்றே ஒவ்வொரு மனிதாபிமானம் உள்ளவனும் நினைப்பான்.

இந்த நிலையோடு, இந்நாட்டில் பார்ப்பனர்களுக்குக் கொடுத்துவரும் வரிகளையும் சேர்த்து எண்ணும்போது, அரசாங்க வரிக்கொடுமைக்கு முன்னால் உஞ்சிவிருத்திக் கூட்டம் மக்கள் உழைப்பை உறிஞ்சிவரும் கொடுமை முதலில் ஒழியவேண்டுமென்றே வஞ்சகம்—தன்னலம் இல்லாத எந்த அரசியல் வாதியும் எண்ண முடியும்—எண்ணவேண்டும்.

அரசாங்கத்திற்கு வரி கொடுப்பவர்கள் எத்தகையவர்கள்? எத்தனை பேர்? தகுதியும் எண்ணிக்கை வரையறையும் இதற்குண்டு.

ஆனால் பார்ப்பனனுக்கு வரிகொடுப்பவர்கள் எத்தகையவர்கள்? எத்தனை பேர்? தகுதியும் இல்லை வரையறையும் இல்லை. இந்து என்று தன்னைச் சொல்லிக்கொள்கின்றவனாய் சூத்திரப்பட்டியலில் இருக்கும் எல்லோருமே எத்தகுதியையுடையவர்களாயிருந்தாலும் கொடுத்து வருகின்றார்கள். எப்படி?

(1) குழந்தை பிறந்தால் அது பிறந்தவுடனே பார்ப்பனனுக்கு வரி (தட்சணை) கொடுக்கவேண்டும். இல்லையேல் குழந்தை நலமுடன் வளராது.

(2) குழந்தை பிறந்த 16-வது நாள் தீட்டுக்கழியும் சடங்கு. இந்தத் தீட்டைக் கழிக்க மந்திரத்தையும் தர்ப்பைப் புல்லையும் கொண்டு வருவான் பார்ப்பான். இதற்கு அவனுக்கு வரி.

(3) குழந்தை பிறந்த சில நாள்—கழித்துக் குழந்தைக்குப் பெயரிடல். பெயரைத் தேர்ந்தெடுத்தவர்கள் பெற்றோர்கள். இதை அவன் வாயால் அழைத்துப்போவதற்கு அவனுக்கு வரி.

(4) குழந்தை பிறந்து ஒரு ஆண்டு முடிந்தால் அப்பொழுது ஆண்டு விழா. இந்த விழாவிற்கும் அவனுக்கு வரி.

(5) பிறகு அந்தக் குழந்தைக்கு உணவூட்டல். இந்த உணவூட்டுவதற்கும் பார்ப்பானுக்கு வரி.

(6) குழந்தை ஆணாயிருந்தால் அக்குழந்தைக்குச் சிரைத்துக் குடுமி வைக்கவேண்டும். இதற்கும் பார்ப்பானுக்கு வரி.

(7) அய்ந்தாவது அல்லது ஏழாவது வயதில் குழந்தைக்கு "அட்சராப்பியாசம்" இதற்கும் பார்ப்பானுக்கு வரி.

(8) பெண் குழந்தையாயிருந்தால் அது பருவமடைந்தவுடன் "ருது சாந்தி" இதற்கும் பார்ப்பானுக்கு வரி.

(9) எந்தக் குழந்தையாயிருந்தாலும் கலியாண மென்றால், பொருத்தம் பார்ப்பது, நாள் குறிப்பது, கலியாணஞ் செய்து வைப்பது, இருவரையும் படுக்கவைப்பது என்கிற பெயர்களால் இத்தனைக்கும் பார்ப்பானுக்கு வரி.

(10) இறந்தால் இறந்த பிணத்தை அடக்கஞ்செய்ய, இருப்பவர்கள் பிணத்திற்காகப் பார்ப்பானுக்கு வரிகொடுக்கவேண்டும்.

(11) இறந்தவனின் மகன் உயிரோடிருக்கும் வரை ஒவ்வொரு ஆண்டும் 'திவசம்' என்ற பெயரால் பார்ப்பானுக்கு வரி கொடுக்கவேண்டும்.

(12) கிரகண நாளாயிருந்தால் கிரகணத்திற்கும் மாதா மாதம் அமாவாசைக்கும் பார்ப்பானுக்கு வரி.

(13) இன்னும் கலப்பை கட்டுவது, விதைப்பது, அறுப்பது ஆகிய உழுதொழிலுக்கும், அவைகளுக்கு நாள் பார்த்துக்கொடுப்பதற்குப் பார்ப்பானுக்கு வரி.

இவை போன்ற—எந்த அரசாங்கமும் வாங்காத வரிகள் எல்லாம் பார்ப்பனீயம் வாங்கிக்கொள்ளக்கொடுத்து வருகிறோம். எப்படி?

பார்ப்பான் காலில் விழுந்து, "நான் கொடுக்கும் இது எவ்வளவு குறைவாயிருந்தாலும் அதைக் குறைவாகக் கருதாமல் பூரணமாகக் கருதி ஏற்றுக்கொள்ளவேண்டு" மென்று பிரார்த்திக்கின்றோம்.

இதற்குப் பார்ப்பான் காட்டும் நன்றி, முழங்கால் முட்டி அடிபட விழுந்து விழுந்து எழுந்திருக்கச்செய்வதும், மாட்டு மூத்திரம் சாணிகளை மகாத்மியமாக எண்ணிக் குடிக்கச்செய்வதும், தேவடியாள் பிள்ளை என்ற பட்டமும்.

இந்த வரிகள் கொடுக்கவேண்டுமா? பார்ப்பான் பழக்கத்தையும் சாஸ்திரத்தையும் காட்டிப் பணம் பிடுங்கத்தான் வேண்டுமா? நாங்கள் இழிவையேதான் அடைந்து வரவேண்டுமா? இதை யெல்லாம் கேட்பதா வகுப்புத் துவேஷம்? உன் சொந்தப் புத்தியைக்கொண்டு ஆராய்ந்து பார்த்துப் பிறகு நீ முடிவு கட்டு!

பல்குழுவும், பாழ்செய்யும் உட்பகையும், வேந்தலைக்கும்
கோல் குறும்பும், இல்லலது நாடு.

—திருவள்ளுவர்.


# குடி அரசு

28—2—48 சனிக்கிழமை.


## ஒரே நாடு ஒரே மொழி?

மத்தியச் சட்டசபையில் ஒரு கேள்விக்குப் பதில் சொல்லும் போது மவுலானா ஆசாத் இந்துஸ்தானியில் சொன்னதாகவும், அவர் சொன்னது இன்னது என்று தெரியாமல் தென்னாட்டுப் பொறுக்குமணிகள் ஒருவரை ஒருவர் பார்த்து விழித்துக் கொண்டிருந்துவிட்டுப் பின் ஒவ்வொருவராக எழுந்து, இந்துஸ்தானியில் சொன்னது புரியவில்லை என்றும், இந்துஸ்தானி தெரிந்தவர்களுக்குக்கூட மவுலானா (பண்டித) இந்துஸ்தானி புரியவில்லை என்றும் கூறியதாகவும், இதைக் கேட்டுச் சாந்த மூர்த்தியின் பிரதிநிதி என்று மதிக்கப்படும் முதல் மந்திரி தோழர் நேரு அவர்கள், இனி மேல் நான் பேசுவதெல்லாம் இந்துஸ்தானியில்தான் பேசப்போகிறேன்; இருப்பதற்குப் பிடித்தமாயிருந்தால் வாயை மூடிக்கொண்டு "கப், சிப்" என்று பேசாமலிருங்கள்; இல்லாவிட்டால் வெளியே போய் விடுங்கள் என்று மிகவும் சாந்தமான முறையில் சொன்னதாகவும், நேரு அவர்கள் இவ்வாறு சொல்வது பிரச்னையைத் தீர்த்துவிடுவதாகுமா? என்று தோழர் பட்டாபி அவர்கள் எடுத்துக் காட்டியதாகவும் ஒரு செய்தியும், இந்துஸ்தானியில் ஒருவர் கேள்வி கேட்க அதற்குத் தோழர் ஜான் மத்தாய் அவர்கள் மலையாளத்தில் பதில் சொன்னதாகவும், அதை வரவேற்றுப் பலரும் சிரித்தார்கள் என மற்றொரு செய்தியும் சமீபத்தில் வெளிவந்ததைத் தோழர்கள் பார்த்திருக்கலாம்.

இந்திய யூனியனின் பாராளு மன்றம் என்று சொல்லப்படும் மத்திய சட்டசபை, இப்போதைய நிலையில் திராவிடர்களுக்குக் கொஞ்சமும் பயன்படமாட்டாது என்றும், திராவிடர்களை அவமதிப்பதற்கும், சிறுமைப்படுத்துவதற்கும், அடக்குவதற்கும், ஒடுக்குவதற்குமே அந்த சபை கருவியாக இருக்க முடியுமென்றும், நாம் நெடுநாளாய்க் கூறி வந்ததையே இந்தச் சம்பவமும் வற்புறுத்துகின்றதென்றாலும், நமது கருத்தை முன்பு ஏற்றுக்கொள்ளாதவர்களும் கூட நேரிடையாக இந்த உணர்ச்சியை— ஆணவத்திற்கு அடங்கி அடிமைகளாக இருக்க வேண்டிய பரிதாப நிலையை— உணர்ந்து அநுபவிப்பதற்கும் இந்தச் சந்தர்ப்பம் பயன்பட்டிருக்கிறது என்பதை எண்ணி வரவேற்கிறோம். முதன் மந்திரி நேரு அவர்கள் நான் இனிமேல் பேசுவதெல்லாம் இந்துஸ்தானியில்தான் பேசப்போகிறேன் என்று முரட்டுத்தனமாகப் பதில் கூறிய பிறகு, தோழர் ஜான் மத்தாய் மலையாளத்தில் பதில் கூறினாரென்றால், அந்தச் சம்பவம் நமது தேசியத் தாள்கள் சொல்வதுபோல தமாஷுக்கு உரிய சம்பவமாகத்தான் இருக்க முடியுமா? என்றும் "உன்னுடைய உரிமைக்கு என்னுடைய உரிமை குறைந்ததில்லை" என்கிற உரிமை உணர்ச்சியைப் பிரதிபலிக்கவில்லையா? என்றும் கேட்கின்றோம். மேலும் தோழர் ஜவஹர் அவர்களுக்கு இந்துஸ்தானியில் பேசுவதற்கு எவ்வளவு உரிமையும், நியாயமும், இருக்கிறதோ அந்த உரிமையும் நியாயமும் ஏன் மற்றவர்களுக்கு இல்லாமற்போகுமென்றும், அதை எப்படி தோழர் ஜவஹர் அவர்கள் மறுக்கமுடியும்? எனவும் எண்ணிய அடிப்படையின் மீதுதான், முதலாளிகளின் பாதுகாவலரான தோழர் ஜான் மத்தாய் மலையாளத்தில் பதில் சொல்லியிருக்க வேண்டுமென்று எவருமே எண்ண வேண்டும். இந்த உரிமை உணர்ச்சியை எவரும் குறை சொல்ல முடியாது.

ஆனால் நாட்டின் பலசிக்கல்களை அறுத்து, முடிவு கட்டுவதற்காகக் கூடியிருக்கும் இவ்வளவு பெரிய அறிவாளிகள், ஒருவர் கருத்தை மற்றவருக்கு அறிவித்துக் கருத்துகளைப் பரிமாறிக் கொள்ள வேண்டும் என்கிற நியாயத்தைப் பின்பற்றாமல், தான்தோன்றித்தனமாக ஒவ்வொருவரும் அவரவர்கள் மொழிகளில் பேசினார்கள் என்றால், இது எந்த நியாயத்திற்கு ஒத்ததாக இருக்க முடியும் எனவும், வாத்தியாயராய் இருக்கும் தோழர் ஜவஹர் அவர்களே இப்படி வழி காட்டுவார்களேயானால், மாணவர்கள் ஸ்தானங்களிலே இருக்கும் மற்ற மெம்பர்கள் எப்படி நடந்து கொள்வார்கள் எனவும், அங்கேயே ஒருவர் சொல்லியதுபோல இது ஏகாதிபத்திய மனப்பான்மையைக் காட்டவில்லையா? எனவும், இந்தப் போக்குத்தானே நாட்டின் எல்லாப் பிரச்னைகளிலும் கையாளப்படும் எனவும், நம் திராவிடத் தேசீயத் தோழர்களைக் கேட்க ஆசைப்படுகின்றோம்.

பல மொழி பேசப்படும் ஒரு துணைக் கண்டத்திலுள்ள சட்டசபையில், இதுபோல மொழித் தகராறு வருவது ஆச்சரியப்படத்தக்கதல்ல என்றாலும், இந்த நிலைமையை வளர விடாமல் இருப்பதற்கு என்ன வழி? என்றால், சபைத் தலைவர் தோழர் மவலங்கர் சொன்னதுபோல எல்லோரும் இந்துஸ்தானியைக் கற்றுக் கொண்டுவிடுவதுதான் தகராறு தீரும்வழி என்று தேசியத்தலைவர்களால், தொண்டர்களால் கூறப்பட்டு வருகின்றது.

இந்தி அல்லது இந்துஸ்தானி அல்லது பல மொழிகளையும் கலந்து பேசப்படும் புதுக்கலவை மொழி என்கிற முறையில் ஏதேனும் ஒருமொழி இந்தியா என்கிற துணைக் கண்டத்திற்குப் பொது மொழியாக இருக்கவேண்டிய அவசியமில்லை என்பதையும், பல வேறு மொழிகளும், நாகரீகப் பழக்க வழக்க மாறுபாடுகளும் நிறைந்து, குணஞ் செயல்களாலும் வேறுபட்டு விளங்கும் இந்தியாவை ஒரே கலாச்சாரம் நிரம்பிய ஒருநாடு என்று கொள்வது எல்லாப் பிரச்னைகளையும் சிக்கலாக்கக் கூடிய ஒருபெரிய தவறு என்பதையும் பல முறை விளக்கி வந்திருக்கிறோம். கனம் ஆச்சாரியாரவர்கள் இந்தி

யைக் கட்டாயமாக இத்திராவிட நாட்டில் புகுத்திய நேரத்தில் அதை எதிர்த்து நமது திராவிடத் தந்தை பெரியாரவர்களும், ஆயிரக் கணக்கான ஆண்களும், பெண்களும் குழந்தைகளுடன் சிறை புகுந்து, இருவரை உயிர்ப்பலி கொடுத்து, உலகத்திலேயே இம் மாதிரியான ஒரு போராட்டம் நடந்ததில்லை என்று பேசும்படியாகச் செய்து, அதை வெறுத்து ஒழித்திருப்பது உலகமே மறந்து விட முடியாத சம்பவமாகும்.

திராவிடர்கள் இந்தி,இந்துஸ்தானி வேண்டாமென்று எதிர்ப்பதற்குக் காரணம்என்ன? இந்துஸ்தானியை வைத்தே இவ்விந்தியாத் துணைக் கண்டத்தை ஆளவேண்டுமென்று நினைப்பவர்கள் இதனை எண்ணிப் பார்க்கவேண்டும்.

திராவிட நாட்டில் கட்டாய இந்தி பரவக்கூடாது என்று கிளர்ச்சி செய்து வெற்றி பெற்றவர்கள், பகுத்தறிவுவாதிகள். இந்தி என்ற மொழியின் மீதுஏன் அவர்களுக்கு வெறுப்பு? மனதிலுள்ளதை வெளிப்படுத்தும் கருவிதான் எந்த மொழியுமே தவிர, எந்த ஒரு மொழிக்கும் தனிப்பட்ட தெய்வீக சக்தியோ வேறு மகாத்மியமோ இருக்கிறது என்பதை நம்பாதவர்கள்—ஒப்புக் கொள்ளாதவர்கள்—பகுத்திறிவு வாதிகள். அப்படியிருக்க அவர்கள் ஏன் கட்டாய இந்தியை எதிர்த்தார்கள்? இதனை எண்ணிப்பார்க்கவேண்டிய ஒவ்வொரு நேரத்திலும், எண்ணுவதற்கேமறுத்துவரும் தேசியத் திராவிடர்கள் தயவு செய்து இப்போதாவது நினைத்துப் பார்க்கவேண்டுகிறோம்.

இந்தியத் துணைக் கண்டத்தை ஒரு நாடு என்றும், ஒரே கலாச்சாரம் நிரம்பியதென்றும், வடநாட்டுத் தேசியத் தலைவர்கள் எல்லாம் சொல்லி வருவதையே, இந்த நாட்டுத் தேசிய வீரர்கள் என்று பட்டங்கட்டிக்கொண்டிருக்கும் மற்றவர்களும் சொல்லி வருகிறார்கள். ஒரே கலாச்சாரம் என்பதன் உண்மையான யோக்கியதை என்ன?

"எத்தனையோ நாடுகளின் கலாச்சாரங்கள் இந்தநாட்டில் வந்து கலந்தன. அவைகளை யெல்லாம் தன்னுள் அடக்கித் தனது தனித்த உயர்வான கலாச்சாரம் விளங்க நிற்கிறது இந்தியா. இதைக் கண்டு நான் பெருமையடைகிறேன்'' என்கிறார் தோழர் ஜவஹர்லால். அவர் எந்தக் கலாச்சாரத்தை உயர்வானது என்று பாராட்டுகிறாரோ அந்தக் கலாச்சாரம் தான் திராவிடர்களைச் சூத்திரர்களாக்கி, தேவடியாள் பிள்ளைகளாகச் செய்து, சமுதாயத்தில் தாழ்வுறச் செய்து, ஓட்டமுடியாத பல ஜாதிகளாக்கி, கல்லையும் மண்ணையும் கடவுள்களாகக் கும்பிடச் செய்து, பார்ப்பனீய மட்டும் உறிஞ்சிப்பிழைப்பதற்கும், மற்ற மக்கள் வாழ்வு எல்லாம் உறிஞ்சப்பட்டு வருவதற்குமாக ஆகிவிட்டது என்பதையும், அந்த ஒரு கலாச்சாரத்திற்கு இந்த நாடு இடங்கொடுத்ததால்தான் நெஞ்சு உறுதியும் நேர்மைத் திறமுமின்றி, வஞ்சகத்தை வீரம் என்றும், தந்திரத்தை அறிவுடைமை என்றும் கருதச் செய்து, காரண காரியத்தைக் கண்டறியும் சக்தியை இழக்கச் செய்து விட்டது என்பதையும்; அந்த ஒரு கலாச்சாரம் இன்னும் புனிதமானது என்று மதிக்கப்படுகிற நிலைமையினால்தான், இந்தநாடு முற்போக்குத் தன்மையை இழந்திருக்கின்றது என்பதையும், அந்த ஒரு கலாச்சாரம்தான் பார்ப்பனீய இந்துமதக் கலாச்சாரம் என்பதாகும் என்பதையும் நாம் பலமுறை எடுத்துக் காட்டி வந்திருக்கின்றோம்.

இந்தியா ஒரு நாடு என்பதையும் அதற்கு ஒரு பொதுமொழி தேவை என்பதையும் திராவிடர்கள்—பகுத்தறிவு வாதிகள்—ஒப்புக்கொள்ளாததை, எந்த அறிவுடையவனும் மறுக்க முடியாத விதத்தில் திராவிடர் கழகம் விளக்கி வந்திருக்கின்றது. விளங்கிக்கொள்ள மறுப்பவர்களுக்கு விளங்காமலிருக்க முடியுமே தவிர, மற்றபடி அவ்விளக்கங்கள் எந்த மனிதனுக்கும் விளங்காமலிருக்க முடியாது.

ஓட்டி வாழ முடியாத—வாழுவதற்கான இயல்பில்லாத—ஒன்றை யொன்று வஞ்சித்தே வாழும்படியான இயல்பினையூட்டி வருகிற வருணாச்சிரம இந்து மதக் கலாச்சாரம் என்றைக்கு இந்த நாட்டைவிட்டு ஒழிகிறதோ, ஒழிப்பதற்கு எப்பொழுது துணிவு பிறக்கிறதோ அப்பொழுதுதான் இந்தியாவை ஒரு நாடு என்று சொல்ல முடியும் என்பதையும், அதற்கு உபாயமாக எமது பெரியாரவர்கள் கூறியிருக்கும், காந்திநாடு, காந்தி மதம் என்பதைக் கைக்கொண்டு அரசாங்கத்தின் மூலமாகப் பரப்பினால்தான் ஒரு நாடு என்கிற சித்தாந்தம் நிலைக்க முடியும்; பிரயோஜனத்தையும் கொடுக்குமென்பதையும், அந்த நிலையில் இந்த நாட்டிற்கு எந்த ஒரு மொழியையும் பொதுமொழியாக்குவதுதான் எளிது என்பதையும், உண்மையிலேயே நாட்டு முன்னேற்றத்தில் அக்கறையுடைய தேசிய வாதிகள் என்பவர்கள், விரைந்து தெளிவடையவேண்டியனவாகும்.

ஜாதிபேதமற்ற — மத உணர்ச்சிக்கு இடமில்லாத—சமதர்மக் குடியரசைக் காண்பதற்கான முயற்சி சிறிதும் இல்லை என்பதையும், மேலும் மேலும் இந்து மத சாம்ராஜ்ஜிய ஆட்சியை நிலைநாட்டுவதற்குத்தான், சமதர்ம வீரர் ஜவஹர், ஜெயப்பிரகாசரிலிருந்து சநாதனச் சாக்கடைச் சங்கராச்சாரி வரை முயற்சிக்கப்பட்டு வருகிறது என்பதையும், காந்தியார் படுகொலைகூட இந்துமதப் பெருமையோடு அய்க்கியப்பட்டு விட்டதென்பதையும் பார்க்கும்போது, இந்தியாவை ஒரு நாடென்பதும், இதற்கு இந்துஸ்தானியோ, இன்னொரு மொழியோ பொதுமொழியாக இருக்க வேண்டும் என்பதும், வடிகட்டின வடநாட்டு ஏகாதிபத்தியத்தையும், வருணாச்சிரம ஆட்சியையும் புகுத்துகிற முயற்சியே ஆகும். இம்முயற்சி, திராவிடஉணர்ச்சியுடைய ஒருவன் உயிரோடு இருக்கும் வரையிலும் வெற்றிதராது என்பதை இப்பொழுதும் வற்புறுத்திக் கூறுகிறோம்.

## ஏஜண்டுத் தோழர்களுக்கு

பல ஏஜண்டுத் தோழர்கள் அந்தந்த மாதத்திய பட்டியலுக்குத் தொகை அனுப்பாமல் இருக்கிறார்கள். அப்பேர்ப்பட்டவர்கள் தயவு செய்து உடனே பாக்கியை அனுப்பிவிடக் கோருகிறோம். தவறினால் கட்டாயம் இவ்வாரத்தோடு அவர்களுக்குப் பத்திரிக்கை நிறுத்தப்பட்டுவிடும் என்பதை அறியவேண்டுகிறோம்.

மானேஜர்.

ரோஜா முத்தையா

# ஆரியன் தமிழ்ப் புலமை.

## அல்லது

# பாரதியும் வள்ளுவரும்.

[சு. கு. அருணாசலனார்]

★

சென்ற அய்ந்தாண்டுகட்கு முன் பாரதியாரின் 'இனியொரு விதிசெய்வோம்' என்ற பாடலின் பகுதியாகிய 'தனியொருவனுக்கு உணவிலை எனில் 'ஜகத்தினையழித்திடுவோம்' என்பது என் கருத்தைக்கவர்ந்தது. பொதுவுடைமைக்காரர் என்போர் எல்லோரும் இப்பகுதியைக் கூறுவதே அன்றும் இன்றும் கூடவழக்கமாய் விட்டது.

இப்பாடலின் முரணியகருத்து, முன்னோர் இதுபற்றிக் கூறியுள்ளனரா என்றுகாண என்னைத் தூண்டியது. என்நினைவிற்கு வள்ளுவர் குறள், வந்தது. இவற்றை ஆராய்ந்ததாலேற்பட்ட எனது கருத்தும், பாரதியார் இவ்வாறு கூறுவானேன் என்று எண்ணிய எண்ணமும் என்னை இக்கட்டுரையை எழுதத் தூண்டின·

அவரது வழுக்களுக்கு ஆரியப்பிறப்பேகாரணம் என்பதையும்முதலில்உரைத்துக் கொள்கின்றேன். "ஆரியநாடு எங்கள் நாடே, ஆரியபூமி, ஆரியன் நெஞ்சு, ஆரிய தரிசனம், ஆயிரமுண்டிங்குசாதி—எனில், அந்நியர் வந்து புக லென்னநீதி? இராமன், கண்ணன், சரசுவதி, இலக்குமி, கீதை, ஆரியவேதம் முதலியோர் (வழுத்துக்கள்) மேலதாயபாடல்கள்" என்ற இத்தகையன பல அவர் நூற்களில் வருவனயாம் கூறியதை அரண் செய்வன.

கால்டுவெல் அய்ம்பதாண்டுகள் போல் தமிழ் ஆய்ந்தும் அவரது அயல் பிறப்பினால் ஒப்பிலக் கணத்தில் (Caldwell's Comparative Grammar) சில இடத்தில் தவறியது இதனோடு ஒப்பு நோக்குக. இலக்கியங்கள் பல யாத்த பாரதியார் எவ்வளவு தமிழ் நூற்களைப் பயின்றும், தமிழருடைய புலனெறி வழக்கங்களை ஆய்ந்தும் இருக்கவேண்டும். இங்ஙனம் பயின்றும், ஆய்ந்தும் அவருக்கு ஆரிய இயல்பு நீங்கினதாகத் தெரியவில்லை. 'உப்பொடு நெய் பால் தயிர் காயம் பெய்தடினும் கைப்பறாப் பேய்ச்சுரையின்காய்' என்பது இவருக்கு மட்டும் தவிர்ச்சியா? (விலக்கோ) ஆரியர் பேசும் தமிழை நகைச்சுவைக்குக் காட்டாகப் பேராசிரியர் தொல்காப்பிய வுரையில் குறித்துள்ளார். பேசும் தமிழே இத்தகையதாயின் பாடும் தமிழைப் பற்றிக் கூறவாவேண்டும்-கானமயிலாடக் கண்டிருந்த வான்கோழி ஆடியது தான் என் நினைவிற்கு வருகின்றது.

இது கொண்டு பாரதியார் தமிழில்நூல் செய்தற்குத் தகுதியற்றவர் என்று யான்கருதியதாகவோ, இழித்துக் கூறியதாகவோ,எவரும் எண்ணவேண்டாம். அங்ஙனம் கூறுபவன் கடைப்பட்டகயவனே என்பதற்கு அய்யமில்லை. ஓராயிரம் ஆண்டு ஓய்ந்து கிடந்த பின்னர் வாராதுபோல் வந்த மாமணியாம் பாரதி, புலமை பழையசெக்கு மாட்டுப் போக்கில் இருந்தது என்ற நிலையை மாற்றியமைத்தோரில் ஒருவர், முதல்வருங்கூட. தவறைத்தவறென்று சொன்னேனன்றிப்புறம் பழித்தற்கன்று. நூலுள் சில இடங்களில் தாம் ஆரியர் என்பதையு மறந்து உள்ளபடியே பாடியிருக்கிறார். "சாதிகள் இல்லை...... 'குலத்தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்' 'எல்லோரும் சமமென்பது உறுதியாச்சே' 'எல்லோரும் ஒன்று எனும் காலம் வந்ததே' 'பார்ப்பானை அய்யரென்ற காலமும் போச்சே' 'பேராசைக்காரனடா பார்ப்பான்' 'பித்தமனிதரவர் சொலும் சாத்திரம் பேயுரையாம்' 'பொய்ச்சாத்திரத்தின் பேச்சை நம்பாதே" முதலியவை இதற்குக் காட்டாகும். 'உரிமை இழந்தார் வந்தோருக் கெல்லாம் கைகட்டி வாழ்ந்தார் தமிழர். போதும் இந்த இழிநிலை அயலானுக்கு இங்கென்ன வேலை' என்று உரிமை வேட்கை (நாட்டுப்பற்று) யைப்பாக்கள் மூலம் பரப்பியவர் இவர் என்பதையும் நாம் மறத்தற்கில்லை. இவற்றிற் கெல்லாம் எனது நன்றியும் வணக்கமும் உரித்து.

இனிப் பொருளில் நுழைவாம். ஜகம் என்பது நிலத்தையும் அதிலுள்ள உயிர்களையும் பொருள்களையும் குறிக்கும். World என்ற ஆங்கிலச்சொல்லின் பொருளும் இஃதே. நிலம் தீநீர்வளி வீசும் போடைந்தும் கலந்த மயக்கம் உலகம் (தொல்காப்பியம்) என்றுகூறும் பழந்தமிழிலக்கணம்.

ஒருவனுக்கு (தொழிலாளி) உணவு இல்லாமைக்குக் காரணம் என்ன? சுருங்கச் சொன்னால் தனி உடைமை ஆட்சிதான். அதற்காக என்ன செய்ய வேண்டும். உலகத்தையே அழித்து விடுவதா? உலகில் என்ன இல்லை? இவற்றிற்குக் கொடுக்கும் விடையில் தான் உலக மக்களின்-பாட்டாளி மக்களின் நிலை அடங்கியிருக்கிறது. உலகில் விளையும் பொருள்களை அறிவியல் முறைப்படி விளைவித்து, செய்யப்படும் பொருள் களையும் அறிவியல் முறைப்படி செய்வித்தால், இக்காலத்திலுள்ள இருநூற்றைம்பதுகோடி உலக மக்கள், ஈராயிரத்தைந்நூறு கோடி மக்களாகப் பெருகிய போதிலும், வாழ்விற்கு வேண்டிய உணவுப் பொருள்களையும், உயர்நிலை வாழ்விற்குரிய கல்வி, கேள்வி, இசை, ஆடல் முதலியவற்றையும் அவரவர்கள் போதுமானவரை அடையக் கூடுமெனப் பொருள் நூல்வல்லார் (நிபுணர்) கணக்கெடுத்திருக்கின்றனர்.

பொதுவுடைமை அரசில் மக்களுக்கு மனநிறைவு (திருப்தி) என்பதே இருக்காது. (Dissatisfaction is the mother of all progress) மனநிறைவின்மையே முன்னேற்றத்திற்குத் தாய் என்பர். நல்வாழ்வு (புது வாழ்வு) பெற்று வாழ உலகு உழைப்பதும், உழைத்தால் உணவு தழைத்திடுமென்பதும் நாமறிந்ததே. இருக்கும் நலங்களைவிட மேலும் நலம் பெற வேண்டுமென்ற எண்ணம், பொதுவுடைமை மன்பதைக்கு (சமூகம்) வளர்ந்து வரும். இந்த மனப்பான்மையை நிறைவு செய்ய முயற்சி எழுந்தவாறு இருக்கும். இன்று காலுக்குப் பாதுகாப்பு, பின்னர் மின்விளக்கு, வானொலி, உயர்நிலைக்கல்வி, பூங்கா, நல்ல வீடு, நன்மக்கள், வேலையில் இன்பம், எல்லார்க்கும் வேலை, கூலி

## ஈரோடு வாசி.

★

"ஈரோடு வாசிக்கு" ஏஜண்சி கொடுக்கும்படிக்கும், சந்தாதாரர்களாகச் சேர்த்துக் கொள்ளும் படிக்கும் வெளியூர்த் தோழர்கள் பலர்கடிதம் எழுதியிருக்கின்றனர்; ஆனால் தற்சமயம் ஷை பத்திரிக்கையானது 4 பக்கங்களுடன் அரையணா விலையில் உள்ளூர்ச் செய்திகள் மட்டும் கொண்டதாக வெளிவர இருக்கிறது. கூடிய சீக்கிரம் 8 பக்கங்களுடன் ஒரு அணா விலையில்எல்லா ஊர்ச் செய்திகளுடன் பிரசுரிக்க ஏற்பாடு செய்கிறோம். அதற்குள் பத்திரிகைக்கும் போஸ்டல் ரிஜிஸ்ட்ரேஷன் நெம்பரும் கிடைத்து விடக்கூடும். அவ்வாறில்லாமல் இப்போது வெளியூருக்கு அனுப்புவதாயிருந்தால் அரையணா பத்திரிகைக்கு முக்காலணா ஸ்டாம்பு ஒட்ட வேண்டியிருக்கிறது.

ஆகவே வெளியூர்த் தோழர்கள் சற்று பொறுத்திருக்க வேண்டுகிறோம்.

மானேஜர், "ஈரோடு வாசி"

ரோஜா முத்தையா

யில் குறைப்பு இன்மை என்ற முறையில் படிப்படியாகவே பொதுவுடைமை வாழ்வு உயர்ந்து கொண்டே போகும். இத்தகைய பொதுவுடைமை உலகைக் காணாது உலகையா அழிப்பது? பாரதிதாசன் கூறுவதைப் பாருங்கள்.

"இது எனதென்னுமோர் கொடுமையைத் தவிர்ப்போம்'
'ஒரு பொருள் தனி' எனும் மனிதரைச் சிரிப்போம்' (கவிதைகள்)
'அழுதிட ஒருவன் மற்றொருவனை மேய்க்கும்
அதருமம் அனைத்தையும் மாய்ப்போம்!
முழுதுலகப்பயன் உலகினர் சமம்பெற அன்பினில் மனிதரைத் தோய்ப்போம்! (முல்லைக்காடு)

பாரதியார் பாட்டு, பாட்டாளி மக்களை வேறு பக்கம் திருப்பிவிட்டு ஏய்க்கும் பித்தலாட்டப் பாட்டாகும். தொழிலாளிகளைப் பொதுவுடைமைக்காரர்கள் எப்படி ஏய்க்கிறார்கள் என்பதையும் கூறி விடுகிறேன். "ஒருவனுக்கு உணவில்லை எனில் பாரதி உலகத்தையே அழிக்கச் சொன்னான். உலகத்தையா அழிக்கப் போகிறீர்கள்? அஃது உங்களால் முடியாது. வேறென்ன செய்யப் போகிறீர்கள்? கூலி உயர்வையேனும் கேட்டுக் தொலையுங்கள்." இதுநம்நாட்டுப்பொதுவுடைமைக்காரர்கள் தொழிலாளிகளுக்குக் கூறுவது. இஃது என்றென்றைக்கும் தொழிலாளர்களைத் தொழிலாளியாகவே-பங்காளியாக ஆக்காமல் இருக்க வைக்கும் வேலையாகும்.

G. D. நாயுடு சொல்வதுபோல் தொழிலாளர் கூலி உயர்வு கேட்காமல் பங்கல்லவா கேட்க வேண்டும். தொழிலாளர் பட்ட பாட்டின் பயனாய் மீதப் படுத்தப்பட்ட-பல தொழிலாளர்களை வஞ்சித்துச் சேர்த்த-பொருள் தான் முதலாளி முதலாகப் போடுகின்றானென்பதல்லாமல் வேறு முதல் ஏது?

"ஏமாந்த காலத்தில் ஏற்றங் கொண்டோன்
புலிவேஷம் போடுகின்றான், பொது மக்கட்குப்
புல்லளவு மதிப்பேனும் தருகின்றானா?" (கவிதைகள்) என்பது உண்மையன்றோ.

தொழில் செய்த தோழர் கூலி நாலணாவை ஏற்பதும், உடலுழைப்பிலாத செல்வர் இன்ப வாழ்வில் புரள்வதும், கடவுள் கட்டளையா? என்றல்லவா அவர்களை அவன் கேட்கத் தூண்ட வேண்டும். பாடில்லாத (பாடு-உழைப்பு) பொருள் திருட்டுத்தானே "பாடுதான் செல்வம் பணமோ அது குறிக்கும் ஏடுதான் என்னும் இது" என்றல்லவா பாரதிதாசன் நல்வழி குறிப்பிடுகின்றது. உழைப்பே செல்வம். பணமோ செல்வத்தைக் குறிக்கும்? பணத்தைச்செல்வமென்று ஏடுதான் சொல்லும் என்பதே அப்பாட்டின் பொருள்.

# பத்திரிகைகளின் செயல் முறை?

★

"சரியான கட்டிடம் அமைக்கப்படுவதற்கு உத்திரங்கள் எவ்வளவு அவசியமோ அதைவிட மிக அவசியமானவை சரியான சமூகத்தை அமைக்கச் சமாச்சாரப் பத்திரிகைகள். ஒரு சரியான சமூகம் எந்த விதமாக அமைக்கப்பட வேண்டுமென்பதை எடுத்துரைத்து—மக்கள் மனதை மாற்றிக் கொண்டே இருக்க வேண்டுவது இன்றியமையாத வேலையாகும் பத்திரிக்கைகளுக்கு. 18 கோடி பாமரர்களைப் பாழான சார் ஆட்சியிலிருந்து அடைந்தோம் சமதர்மிகளாகிய நாம். அந்த 18 கோடி மக்களில் பெரும் பகுதி படிப்பென்பதையே பயிலாதவர்கள். மற்றைய நாட்டின் நாகரிகத்தில் நான்கில் ஒரு பங்கைக்கூட பார்க்காதவர்கள். ஆகவே அவர்களைக் கொண்டு அமைக்க விரும்பும் நமது அரசியலுக்கு ஆக்கவேலை அடிப்படையை அசையாது ஆக்கவேண்டிய கடமை நமது பத்திரிக்கைகளுடையதாகும். தங்கள் தங்களின் பொறுப்பு எத்தகையது என்பதை உணர மக்களுக்கு மதியூட்ட வேண்டும். புதிய சமூகத்தின் முறைகளைப் போதிக்க வேண்டும்.

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மக்களும் செய்ய வேண்டிய கடமைகளைத் திட்டமிட்டுச் சொல்லவேண்டும். மக்கள் முதலில் படிப்பதில் கவலை கொள்ளக் கற்பிக்க வேண்டும். சுகாதாரமாய் வாழ வழிகளை வகுத்துக் காட்டவேண்டும். குறித்த காலத்தில் குறித்த காரியத்தைச் செய்யும் கொள்கையை வளர்க்கவேண்டும். வளரும் வாலிபச் சிறார்களை வன்மொழி பேசி வதைக்காதிருக்க வற்புறுத்தவேண்டும். ஒருவரை ஒருவர் ஏமாற்றிப்பிழைக்கும் எக்காரியமும் இல்லாதிருக்க இடித்துக் காட்டி, இனிய வழியில் ஏற்ற வாழ்க்கை நடத்த எழுதவேண்டும் எம் நாட்டுப் பத்திரிகைகள். மேழிச் செல்வம் கோழைப் படாது என்ற மூதுரைக்கிணங்க நம் நாட்டு மக்கள் விவசாயத்தைக் கொண்டே விரும்பிய நலனை உழைத்துப் பெற்று வாழவேண்டும். வானத்தை நோக்கி வரம் வாங்கி வாழ்வு நடத்துவதில் வைத்திருக்கும் பாழான நோக்கம் பட்டு வீழப் பகுத்தறிவுச் சுடர்பற்றி எரியப் பத்திரிகைகள் பாடுபடவேண்டும். சுருக்கமாய்ச் சொன்னால் 18-கோடி மக்களின் புதிய வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியும் பத்திரிகைகள் மூலம் பரிபாலிக்கப்படவேண்டும். கண்காணிக்கப்படவேண்டும்" என்று அன்று சொன்னார் அந்நாட்டின் அரசியல் அறிந்த லெனின் என்பார்.

ளர்த் தொழிலாளர் உழைத்த உழைப்பில் தோன்றிய கல்லவா முதலாளியின் மெய். வஞ்சித்த-திருடிய பொருளுக்கு முழுஊதியம் எடுத்துக்கொள்! பாடுபட்டவனுக்குக் கொஞ்சம் நல்லசோறுபோடு! என்றா தொழிலாளிகளைப் பொதுவுடைமைக்காரன் கேட்கவைப்பது? இது பெரியார் ஈ. வே. ரா. சொல்லுவதுபோலச் "செம்பைப் பொன்னாக்குகிறேன்; சோறுபோடு" என்று கேட்கும் போலித் துறவிகூற்றைப் போலல்லவா இருக்கிறது. 'பாண்டியன் பரிசில்' புரட்சிப் பாவலர் கூறுவதுபோலப் "பொருளாளி திருடனை விளைவிக்கின்றான் பொதுவுடைமையோன் திருடனைக் களைவிக்கின்றான்" என்றல்லவா கூறவேண்டும்.

[முடியவில்லை]

(6ம் பக்கத் தொடர்ச்சி)

கான பல தீர்மானங்களையும் நிறைவேற்றிய அதே மகாநாட்டில் அதே மேடையில் நாடு பிரிதல் கூடாது, நாட்டை இனியும் துண்டாடுவது துரோகச் செயல், அப்படிப் பேசுகிறவர்கள் நாட்டுக்கு தீச்சேவை செய்கின்றனர் என்றும் பேசினார்கள் என்றால், பார்ப்பனீயத்தின் சதி வேலை எவ்வளவு பகிரங்கமாகச் செய்யப்படுகின்றது என்று சிந்திக்கும்படி கேட்கிறோம். காந்தியாரைக் கொலை செய்யும் காரியத்திலிருந்து கள்ளச் சாராயம் காய்ச்சுபவனைப்பிடிக்கும் கான்ஸ்டேபிள்வரை பார்ப்பனீயம் தன் வேலைகளைத் தவறாமல் செய்து கொண்டுதான் வருகிறது.

பார்ப்பனீயத்திற்கு கேடுவருகிறது என்று தெரிந்தவுடன் எந்த வகையாலும் அந்த எதிர்ப்புச் சக்தியை அழிப்பதற்குக் கங்கணம் கட்டிக் கொள்ளுகிறார்கள் காப்பி ஓட்டல் பார்ப்பனன் முதல் பத்திரிகை நடத்தும், இன்னும் மந்திரிவேலை செய்யும் பார்ப்பனர் வரையில். இது எந்த விதத்திலும் வகுப்புப் பிரச்சாரம் அல்லவாம்! எப்படியிருக்கிறது இவர்களின் கூற்று. பஞ்சாப்பில் நடந்த வகுப்புக் கலவரத்தை ஒன்றுக்குப் பத்தாகக் கிளரி கிளரி எழுதி நம் நாட்டிலும் ஹிந்து-முஸ்லிமிடையே கலவரத்தை மூட்டிவிடப் பார்க்கும் பத்திரிகைகளான மவுண்ரோடு மகாவிஷ்ணு ஹிந்து முதல் எல்லாப் பார்ப்பனப் பத்திரிகைகளும் எழுதிவருவதைப் பார்க்கும் அன்பர்களுக்கு விளங்காமல்போகாதுவகுப்புப் பிரச்சாரகர்கள் யார் என்று. இப்படி பத்திரிகைகளில், மக்களிடத்தில் துவேஷத்தை வளர்த்துவிட்டு தங்கள் ஆதிக்கத்தை அதிகமாக்கிக் கொள்ள வேண்டும் என்று, எழுதிவரும் ஆசிரியர்கள் தமிழ் மொழியிலும் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்ட விரும்பினார்கள் போலும். திரு என்ற அழகிய வார்த்தையை விட்டு 'ஸ்ரீ' என்ற எழுத்தையே உபயோகித்து வரும் இந்தக் கூட்டம் தமிழ் மொழியில் எழுத்து மாற்றம் செய்ய வேண்டும் என்ற பணியில் இறங்க முற்பட்டுள்ளது. ஏற்கனவே தமிழில் புகுத்தப்பட்டுள்ள வடமொழிப் பதங்கள் ஏராளம். இது வடமொழி, இதுதமிழ் மொழி என்று ஓர் அளவு படித்தவர்களுக்கே புரியவில்லை. இந்த நிலையில் இன்னும் வடமொழியைப் புகுத்துவதற்குச் சமயம் தேடிக் கொண்டிருக்கின்றனர் போலும்.

அகண்ட பெரிய ஆலமரம், அரசர்கள் பெரும்படையுடன் தங்கி இளைப்பாறவும் இடம் கொடுக்கக் கூடியது தான், ஆனால் புல்லுருவி சில கிளைகளில் படர ஆரம்பித்து விட்டால் ஆலமரத்தின் ஒரு கிளை உயிருடன் இருக்கும் வரையும் அம்மரத்தையே காய்த்துச் சாய்த்து விடும். அதுபோல் பார்ப்பனப் பத்திரிகைகள் என்ற புல்லுருவிகள் படர்ந்து வருகின்றன. அந்தப் புல்லுருவிகள் படரா வண்ணம் களைதல் வேண்டும், கலைநிலை பெறவேண்டுமென்றால். அவை எந்த உருவத்திலும், எந்த நேரத்திலும் என்னவேண்டுமானாலும் கூறி இடம்பெற வழி தேடும். அந்தப் புல்லுருவிக் கூட்டத்தை ஒழித்தாலொழிய எந்தப் பணியிலும் வெற்றிபெற முடியாது. அந்தப்பணியை வெற்றிபெறச் செய்யும் சக்தி திராவிடக் கழகத்தினிடந்தானிருக்கிறது என்பதை எவராலும் மறைக்கவோ மறுக்கவோ முடியாது.

---

[4ம் பக்கத் தொடர்ச்சி]

முனகிக் கொண்டு வாயை அசைத்துக் கொண்டிருந்தது. அவ்வுருவம் ஏன் முனகிக் கொண்டேயிருக்கிறது, என்ன முனகிக் கொண்டிருக்கிறது என்பதை மணி நன்கு அறிவான். காரணம் மணி ஈரோட்டுப் பள்ளியின் பாடம் கற்றவன். ஆனால் அவனது தோழர்கள் வார்தாப் படிப்பும், மாஸ்கோப் படிப்பும் கற்றுக் கொண்டவர்கள். தோழர்கள் தமது படிப்பின் துணை கொண்டு இதுகாறும் அவ்வுருவத்தின் பண்புகளை ஆராய முடியவில்லை. ஆராயவும் விடவில்லை, அவர்களின் படிப்பு. இன்றுதான் தோழர்களின் மயக்கம் தெளியும் என்று நினைத்துக் கொண்டு மணி பேச ஆரம்பிக்குமுன் தோழர்கள் "மருந்து எங்கே" என்று கேட்டு விட்டனர். உடனே மணி எதிர்க் கரையில் முனகிக் கொண்டிருந்த அவ்வுருவத்தைக் காண்பித்து "இது தான் மருந்து" என்று பதிலிறுத்தான். ஆனால் அவர்களோ இது சாதாரணமான மருந்துதானே என்று அலட்சியமாகக் கூறிவிட்டனர். அப்போது அவர்களின் பித்தம் பாதி தெளிந்திருந்தது. ஆனால் முற்றும் இல்லை.

தோழர்களின்பால் இரக்கம் கொண்ட மணி சங்க இலக்கியப் பாடல் ஒன்றைப் பாடிக் காட்டினான். "ஆற்றோரத்திலே, அந்தி வானத்திலே நிற்கும் நாரை மந்திர உச்சாடனம்செய்வது போன்ற பாவனையுடன் நீர் நிலைகளின் அருகே நித்த நித்தம் அமர்ந்துள்ள பார்ப்பனரின் உருவம் போன்றிருந்ததாம் கவிக்கு" என்ற அரும் பொருள்தான் அப்பாட்டுக்கு. பாட்டின் பொருளைக் கேட்ட தோழர்கள் "இதேதடா அணுக் குண்டு காலத்தில் கருஞ் சட்டைக்காரன் தோன்றுவதற்கு முன்பாகவே சங்க காலத்தில் கருஞ்சட்டைக்காரன் தோன்றியிருக்கிறான் என்று தம்மையும் அறியாமல் கைகொட்டிச் சிரித்து விட்டனர். ஆனால் பித்தம் முழுதும் தீரவில்லை.

வானொலியிலே வந்த இன்னிசை முடிந்ததும் மணி தன் தோழர்களை அழைத்துக் கொண்டு வந்த வழியிலேயே திரும்பிச்சென்றான். பலதெருத் திண்ணைகளில் பலப்பல உருவங்கள் அமர்ந்து கொண்டு புரியாத மொழியில் ஏதேதோ குழறும் ஒலிகளை ஒலித்துக் கொண்டிருந்தன. ஆற்றோரம் நாரை போன்று அமர்ந்திருந்த அதே உருவங்கள்தான் அவ்வொலிகளை எழுப்பியது என்பதை மணி சொல்லாமலே அவனது தோழர்கள் உணர்ந்து கொண்டனர். தோழர்கள் சற்று நேரம் சிந்தித்த வண்ணம் மௌனமாக சென்றனர். அவர்களது சிந்தனை ஆரிய திராவிட முரண் பாட்டை ஆராய்கிறது என்பதை மணி அறிந்து கொண்டான்.

சிந்தித்துக் கொண்டே வந்த அவர்களை மணி மற்ற தெருக்களுக்கு அழைத்துச் சென்றான். அங்குள்ள மக்கள் அனைவரும் புரியக்கூடிய மொழியில்தான் பேசினர். உரையாடினர். வழிபாடு செய்தனர். மணி தன் தோழர்களை நோக்கி "இப்போது பித்தம் அனைத்தும் தெளிந்து விட்டதா தோழர்களே!" என்று புன்னகையுடன் கேட்டான். அவர்கள் உண்மையுணர்ந்தவர்களாய்த் தலையை ஆட்டினர்.

மறுநாள் முதற்கொண்டு தோழர்கள் இருவரும் மணியின் ஈரோட்டுப் பாதைக்குத் திரும்பினர். கருஞ்சட்டை அணிந்தனர். அன்றிருந்து "ஆரியப் பித்தம் தெளிய மருந்தொன்றிருக்குது ஆற்றங்கரையினிலே" என்று மணி ஆனந்தமாகப் பாடிக் கொண்டிருந்தான்.

---

**வகுப்புவெறி ஒழிய வருணாச்சிரமம் ஒழிக!**

# கனவில் கண்ட காரிகை.

[பி. எஸ். சந்திரசேகரன்]

★

இரவு 10 மணி இருக்கலாம். வானத்தில் விண்மீன்கள் கண்சிமிட்டல்களுக்கிடையே சந்திரன் தன் பிரயாணத்தை நடத்திக் கொண்டிருந்தான். வெண்மணற்பரப்பில் என்தலையைச் சாய்த்து எண்ணமிட்டவாறு இருந்த போதிலும் அந்தக் கடற்கரையில் அலைகளின் கோரஒலி நிம்மதியை கலைத்துக் கொண்டிருந்தது. வாழ்க்கைச் சுழலில் சிக்குண்டு உடலும் உள்ளமும் சோர்ந்திருக்கும் தருணத்தில், மனிதன் நிம்மதியைத் தேடுகிறான். ஆழ்கடலில் மூழ்கிய கப்பலிலுள்ள மனிதனுக்கு நீரில் தத்தளிக்கும் பொழுது அவனுக்கு அனுசரணையாகப் பக்கத்தில் மிதக்கும் பொருள்களை எப்படி அணைத்துக் கொள்கிறானோ, அதைப்போலவே வாழ்க்கையில் ஏற்பட்ட அயர்ச்சி-அதன் பலன் அல்லல்-அதை மறக்க ஆனந்தத்தைபெற, அலைகடலின் முன்னே ஆழ்ந்த அமைதியைத் தேடிக் கொண்டிருந்தேன்.

அங்கு விளையும் தண்மையான காற்று என் மனக்கிளர்ச்சியைத் தணித்தது. சிறிது நேரம் மெய்மறந்து சாய்ந்திருந்தேன். திடீரென்று ஒரு அழுகைக் குரல்-ஆம் பெண் குரலொலி. எழுந்து சுற்றும் முற்றும் பார்த்தேன். ஒன்றும் தெரியவில்லை.

ஒலி கேட்கும் திக்கை நோக்கிச் சென்றேன். நான் கண்ட காட்சி என்னை மெய்மறக்கச் செய்துவிட்டது. ஒரு இளங் கன்னி கண்ணீரும் கம்பலையுமாய்க் காட்சியளித்துக் கொண்டிருந்தாள். என்னைக் கண்டவுடன் ரொம்பவும் கதற ஆரம்பித்தாள். அவளுடைய. அழுகையுடன் விம்மலும் கலந்து வந்தது. அவளைப்போல் அழகியை அகிலத்திலும் காணமுடியாது. அத்தனை பேரழகு அவளுக்கு ஒருங்கே அமைந்திருந்தது. வெகு நேரம்வரை அவ்வனிதையைப் பார்த்துக் கொண்டிருந்தேன் திகைப்புடன். துணிந்தேன் விசாரிக்க.

"அம்மா தாங்கள் யார்" என்றேன் உடல் பதற்றத்துடன்.

என்னை ஏறிட்டு ஒரு பார்வை பார்த்தாள் அப்பெண். திரும்பப் பேசச்சக்தியற்றிருந்தேன்.

அக்கன்னி சொன்னாள் விம்மலுடன், தன்கண்ணைத் துடைத்துக் கொண்டு "நான் இயற்கைத் தேவி" மேலும் சொல்லுவதற்குள் தேம்பி, தேம்பியழ ஆரம்பித்தாள்.

என்உள்ளம் ஆச்சரியத்தால் நிரம்பி வழிந்தது.

"நான் விதவை"

யார் தாங்களா?

ஆம் இயற்கையின்பங்களை உள்ளடக்கியிருப்பவள்தான் நான். ஆனால் அவ்வியற்கைச் செல்வங்களை அனுபவிக்க யாரும் என்னை அணுகுவதில்லை. இன்றல்ல, பல ஆண்டுகளாக. களிப்பென்பதே கனவிலும் கிடையாது. என் எழில் காட்டாறு போன்றது. என் இயுற்கைகள் பாழாகின்றன. விதவைக் கோலம் பூண்டிருக்கிறேன்....இன்னும் சொல்லிக் கொண்டே போனாள். தேவியின் ஒவ்வொரு வார்த்தையும் என் உள்ளத்தில் கிளர்ச்சியை உற்பத்தி செய்து கொடுத்தன.

"தேவி! தாங்கள் கைம்பெண்ணா? இயற்கைச் செல்வியல்லவா? வானமளாவிய மலைகளும், மரங்களும், நகர்ந்து செல்லும் நதிகளும், அழகான அருவிகளும் தண்மை நிறைந்த தடாகங்களும் வண்ணவித்தை காட்டும் வசந்த மணமலர்களும், பண்ணிசைக்கும் பறவைகளும், வலம் வரும் வண்டுகளும்..........."

"போதும் நிறுத்து! இவைகளை யார் அனுபவிக்க வருகிறார்கள்? கஷ்டத்தைத் தவிர களிப்பென்பதே கிடையாதே" என்றாள் இயற்கை தேவி. அவளுடைய உதடு துடித்துக் கொண்டிருந்தன.

சிறிது நேரம் கழித்து அமைதியோடு சொன்னாள் கொஞ்சம்கூட தயக்கமின்றி, "மனித சமுதாயத்தில் மடமைகள் மலிந்து காணப்படுகின்றன. மடமை ஓர் பேரகராதி போன்றது. மனிதன் அதைப் பின்பற்றுகிறான் முன்னோர் வகுத்த வழியென்று. அவைகளில் சில அத்தியாயங்கள் கணவன் காலமானால் மனைவியின் வாழ்க்கையை வெப்பத்தில் காட்டி எடுக்கப்பட்ட சருகு போன்று வாட்டி வதக்கி, விதவைப்பட்டம் அளித்து அல்லலையே ஆபரணமாக அணிந்து, வீட்டைச் சிறைக்கூடமாக்கி வைத்திருக்கிறார்கள் சமுதாயத்தார். வாழ்க்கையின் இனிய ரசத்தைப் பருகிச் சுவைக்க முடியாது. சக்தியற்றல்ல. சமுதாயத்தின் சட்டம். இதைப் போன்ற நிலைதான் எனக்கும்" என்றாள். அதைப் பெருமூச்சுடன் நிறுத்தினாள் அவ்வியற்கைக் கன்னி.

அவள் உதடு அசைவதை எதிர் பார்த்துக் கொண்டிருந்தேன். "அதோ பார்! கடலின் தோற்றத்தை. அதன் எழிலைச் சுவை! என்று காண்பித்தாள் அவ்வியற்கையழகி.

நிலவொளி விரிக்கப்பட்ட அந்த ஆழ்கடலைப் பார்த்துக்கொண்டிருந்தேன் பரவசத்துடன். வெண்ணிலவுவேய்ந்திருந்த, பசுமை நிறைந்த பாலொளிபடர்ந்திருந்த சமுத்திரத்தைக் கண்டு களிப்படைந்து மெய்மறந்திருந்தேன்.

கூச்சமின்றி என்னைத் தொட்டாள். திடுக்கிட்டு அவ்வெழிலாள் அருகில் சென்றேன். மீண்டும் சொன்னாள், தன் ஒளி நிறைந்த கண்களை அகல விரித்துக் கொண்டு "கடல் என் இயற்கைக் குழந்தை. இவ்வுலகத்தில் எண்ணிலாச் செல்வங்கள் எனக்குண்டு. அதை அனுபவிக்க ஆதரவு கொடுக்க வருவதில்லை. மனிதன் ஒரு யந்திரம் போன்றவன். உழைத்து—உழைத்த பலன் காணாது உள்ளத்தளர்ச்சிடைகிறான். மன நிம்மதியைத் தேடி மது, ஒரு சிலர் கோவில்..........பேச்சை நிறுத்தி வானத்தைப் பார்த்தாள்.

அவளது சோபையற்ற முகம் முன்னைவிட அதிக மாறுதல் அடைந்திருந்தது. தன் குரலை உயர்த்திப் பேசினாள். "உழைத்து

**வருணாச்சிரமம் ஒழிய இந்துமதமும் ஒழிக!**

உழன்ற உள்ளத்தை உற்சாகப்படுத்த என்னிடம் வருவதில்லை. நெற்றி வேர்வை நிலத்தில் விழப் பாடுபட்டுக் கண்ட பணத்தைப் பாழாக்குகிறான் ஆலயங்களிலே. கல் தெய்வங்களுக்குக் காணிக்கை செலுத்துகிறான் ஏன்? சமுதாயத்தின் மூடப்பழக்கங்களின் நடுவே மனிதன் உழலுகிறான்''.

"ஆம் உண்மை'' என்றேன் நான் வெகு துணிவுடன்.

"இந்த உண்மையை உன்மத்தம் பிடித்த உலுத்த சமுதாயம் அறிய வேண்டும். மூடப்பழக்கத்தால் மூழ்கடிக்கப்பட்ட முட்டாள் சமுதாயம் உணரவேண்டும்''. உணர்ச்சி ததும்ப உரத்த குரலில் பேசினாள் இயற்கை தேவி. "மேனாடுகளில் இயற்கைகளைப் பேணுகிறார்கள் என்பதோடுமட்டுமல்ல அனுபவிக்கிறார்கள். ஆனால் இங்கு காசி, ராமேஸ்வரம் சென்று கற்கடவுள்களுக்குக் காசைக் கரியாக்கும் கைங்கர்யத்தைக் காண்கின்றோம். இயற்கைகள் வீணாவதைப்பற்றி அவர்கள் சிந்திப்பதில்லை. மலைமீதிலிருந்து மடுவிற்கு ஓடிவரும் அழகுள்ள அருவிகள், ஆடிடும் மயில், பாடிடும் குயில், இசைக்கும் வண்டு, தடாகத்தில் தழைத்திருக்கும் தாமரைகள், பல்லையொத்த முல்லை மலர்களின் சுகந்த மணங்கள் வீணாகின்றன. கண்டு களிப்பவர் யார்? இயற்கைகளைப்பற்றிப் புகழ்ந்து பாக்கள் பாடிய இந்த நாட்டில் இன்று நான் கைம்பெண்ணாகக் காட்சியளிக்கும் கோலத்தைக்கொண்டிருக்கிறேன். இயற்கை காட்சிகளைக் கண்டானந்தித்த மக்கள் நிறைந்திருந்த இந்தத் தமிழகத்திலே கேட்பாரற்று கிடக்கிறேன். இயற்கையைக் கடவுளாக வணங்கிவந்த நாட்டிலே, என்னைப்போற்றயாருமில்லை. என்ன மதியீனம்! மூடப்பழக்கத்தை வெட்டிச் சரியுங்கள்! அறியாமையை அகற்றி அறிவை அளித்து ஆக்கம் பெறச் செய்யுங்கள்! கல் தெய்வத்திற்குக் காணிக்கை செலுத்தும் கயமைத் தனத்தைக் களைந்தெறிந்து, இயற்கைச் செல்வத்திற்கு இடமளித்து இந்நாட்டை இன்ப புரியாக்குங்கள்! பழமையைப் போக்குங்கள்! புதுமையைப் புகுத்துங்கள்! என் விதவைத் தனத்தை விரட்டுங்கள்! என் செல்வங்களைச் செம்மையுறச் செய்யுங்கள்! நான் உன்னைவிட்டுப் பிரிகிறேன்! என் கருத்தை உலகுக்கு அறிவித்திடுக!

என்று கூறிவிட்டு எங்கேயோ சென்றாள்.

மெய்மறந்திருந்த நான் இயற்கைத் தேவி போனதை அறிந்தேன். தேவி! தேவி! என்று கூப்பிட்டேன் உரத்த குரலில். என் நித்திரை கலைந்தது. மணலில் வெகு நேரம் தூங்கிவிட்டதை அறிந்தேன். கனவில் கண்ட கைம்பெண்ணின் கருத்தைச் சிந்தித்தவாறு வீடு நோக்கி நடந்தேன்.

(3ம் பக்கத் தொடர்ச்சி)

இந்து தர்மத்தையும் காப்பாற்ற வேண்டுமென்று, சவாரியில் சுகமும் சவுகரியமுங் கண்டவர்கள் சொல்லுகிறார்கள். ஒருவன் முதுகில் இன்னொருவன் ஏறிச் சவாரி செய்வதே இந்து கலாச்சாரமும், இந்து தருமமுமாக இருந்து வருகிறது. பேச்சிலும் எழுத்திலும் எந்தப் பெரிய பிராமணனும் இதைச் சொல்லுகிறார்கள். அதைக் கேட்டு மற்ற படித்த மேதாவிகளும் கூடப் பாடுகிறார்கள்.

முதுகின்மேல் ஏறிக் கொண்டிருப்பவர்களை இறக்கி விடுங்கள், அல்லது தள்ளிவிட்டுப் போங்கள். இரண்டில் எதையேனும் ஒன்றைச் செய்யாமல், எங்களை ஏன் குற்றம் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள்? எங்கள் காலில் விழுந்து பணம் கொடுத்துத் தோளில் நீங்களாகத்தானே ஏந்தி வைத்துக் கொள்ளுகிறீர்கள்? என்று கேட்கலாம், கேட்பார்கள். ஏறிச் சவாரி செய்கிறவனுக்குப் பொய்க் கடவுள் உதவியாகவிருக்கிறது. அந்தப் பொய்க் கடவுளையும், அந்தக் கடவுள் சொன்னதாகச் சொல்லும் பொய்ச் சாஸ்திரங்களையும் இறக்க வேண்டும். அதற்காகத்தான் உலகமெங்குமில்லாத நம்முடைய பொய்க் கடவுளின் லீலாவிநோதங்களைச் சொல்லுகிறோம். சவாரி செய்கிறவர்களைப் பலாத்காரத்தால் தள்ளுவது எங்களெண்ணமல்ல. இராஜாங்கத்தின் சட்டதிட்டங்களுக்குக் கீழ்ப்பட்டு நடப்பதே எங்கள் கொள்கையும் பெரியார் உத்தரவுமாகும். தன்னலம் கருதாது பிறருக்கு உழைப்பவனே பிராமணன் என்றும், கர்மேந்திரியம் ஞானேந்திரியங்களை அடக்கி, ஆசையை விட்டவனே பிராமணனென்றும், மற்ற பிராமணனுக்குத் தானதருமம் செய்தால் செய்தவன் குடும்பம் அழிந்து போகுமென்று உங்கள் சாஸ்திரம் சொல்லியிருப்பதையும் சொல்லுகிறோம். ஏறிய விஷம் மெதுவாகத்தானிறங்கும். சூத்திரன் என்றால் அறிவு இல்லாதவனென்று நீங்களும் தெரிந்துதானே பெயரிட்டீர்கள். கல்வியும் அதன் அறிவும் உலகத்தை ஆளுகிறது. உபாத்தியாயர்களே பண்டைய மத சம்பிரதாயங்களுக்கு விரோதம் சொல்லாதீர்கள், என்று கல்வி மந்திரி உத்தரவு போட்டிருக்கையில், நாங்கள் பயந்தே எங்கள் நியாயத்தைச் சொல்லுகிறோம்.

நம்முடைய இந்து சாஸ்திரங்களில் தெய்வம், ரிஷி, பிராமணன் இவர்கள் சம்மந்தப்படாததில்லை. சொன்னவர்கள் ரிஷிகள். நமக்கு உபதேசித்தவர்கள் பிராமணர்கள். ரிஷி, பிராமணன் இரண்டும் ஒன்றுதான். ரிஷி என்று ஒரு இடத்தில் வந்தால் மறு இடத்தில் அந்த ரிஷியை உத்தமப்பிராமணனென்று, நம்மை ஏமாற்றும் இடத்தில் சொல்லுவார்கள். நம் குறைபாடுகளைச் சொல்லுகையில் மூன்றும் நியாயத்திற்கு விரோதமாகவிருக்கும். அப்பொழுது மூன்றையும் நாம் குற்றம் சொல்லவேண்டியிருக்கிறது. அப்பொழுது கடவுள் விரோதி, பிராமணத்துவேஷி என்கிறார்கள். அந்த மூன்று பேராலுமுள்ள ஏடுகளே நம்மைக் கேவலப்படுத்தி வழியோராக்கியது. நமது இதிகாச புராணங்களில் குற்றம் செய்பவன் குற்றவாளியுமல்ல. தண்டனையும் கிடையாது. குற்றத்தைச் சொன்னவன் குற்றவாளி, தண்டனையுமுண்டு. இதை நான் படித்ததிலிருந்து ஒன்றையும், பார்த்ததிலிருந்து ஒன்றையும் சொல்லுகிறேன். கருத்தோடு படித்துக் கவனத்தில் வையுங்கள். சமயம் கிடைத்தால் தத்துவார்த்த விளக்கப் பண்டிதர்களுக்கும் சொல்லுங்கள்.

சங்கற்ப விகற்பமில்லாமல் எங்கும் தானேதானாய் விளங்கும் கடவுள், அந்தணர் குறை மூடிப்பான் வேண்டி விரதம் பூண்டு இராமராக அவதாரம் எடுக்கவும், இராட்சதர்கள் பிறக்கவும், இராமாயணம் நடக்கவும், காரணமாக இருந்தவைகளில் முதற்காரணத்தைச் சொல்லுகிறேன். வைகுண்ட அரண்மனையில் விஷ்ணுவும், லெட்சுமியும் வாழ்ந்து வருகையில் ஒரு நாள், "நாங்களிருவரும் லீலாவினோதத்திற்கு அந்தப்புரம் போகிறோம். யாரையும் உள்ளே விடாதீர்க''ளென்று காவற்கார விஜயன் ஜெயன் என்கிற துவாரபாலர்களுக்கு உத்தரவிட்டு அந்தப்புரம் போனார்கள். அப்பொழுது சனகாதி மகரிஷிகளென்கிற பிர்மாவின் பிள்ளைகள் வந்தார்கள். உள்ளே போனார்கள். இப்பொழுது உள்ளே போகும் சமயமல்லவென்று காவற்காரர்கள் தடுத்தார்கள். ரிஷிகளுக்குக் கோபம் வந்து "இராட்சதர்களாகப் போகக்கடவ''தென்று காவற்காரர்களுக்குச் சாபம் கொடுத்தார்கள். இந்தச் சத்தம் கேட்டு விஷ்ணு வந்து ரிஷிகளை வணங்கினார். காவற்காரர்கள் தங்களுக்குக் கிடைத்த சாபத்தைப்பற்றி வருத்தப்பட்டார்கள். உடனே விஷ்ணு, "பிராமணர்கள் கொடுத்த சாபத்தை என்னாலும் நீக்க முடியாது, யாராயிருந்தாலும் அனுபவித்தே தீரவேண்டும், நீங்கள் இராவண கும்பகர்ணனாகப் பிறங்கள், நான் இராமராக அவதா

ரம் பண்ணி, உங்களைக் கொன்று வைகுண்டம் வரும்படியாகச் செய்கிறேன் என்றார்.

பார்த்தீர்களா நியாயத்தின் தீர்ப்பை? எஜமானனிடம் உத்தரவுபெற்று, வார்த்தைக்குக்கட்டுப்படாதவர்களைத் தடுப்பது காவற்காரனின் குற்றம். தண்டனையும் அளித்தாய் விட்டது. இன்னொருவர் வீட்டுக்குள் உத்தரவில்லாமல் போவது குற்றம். காவற்காரர் தடுத்தும் போவது அதைவிடக் குற்றம். எஜமானனும் எஜமானியும் தனித்திருக்கிறார்கள், அங்கே போகக்கூடாது என்று தடுப்பதை மீறுவது எவ்வளவு பெரிய குற்றம்? இது நமது வைகுந்தவாசனுக்கும், பிர்மாவின் பிள்ளைகளான ரிஷிகளுக்கும், பெரிய இதிகாசமான இராமாயணத்திற்கும், விஷ்ணு புராணத்திற்கும் குற்றமல்ல. தடுத்ததே காவற்காரனின் குற்றம். இந்தக் கதையிலிருந்து ஏற்பட்ட பிராமண ஆதிக்கம், இங்கிலீஷ் நாகரீகத்தால் குறைந்தாலும், இனியுமிருந்துகொண்டுதானிருக்கிறது. இப்பொழுதுபிராமணர்கள்செய்வது, நடப்பது, ஒன்றுமே குற்றமில்லையாம். அது வகுப்புத்துரோகத்தின் கீழே வருவதில்லை. அதைக் குற்றமாகச்சொன்னால், வகுப்பு விரோதத்தை நாம் உண்டாக்குகிற குற்றத்தில் வருகிறோம்.

இனி நான் பார்த்த தீர்ப்பைக் கேளுங்கள். பாலக்காட்டுக்குச் சமீபமாய் ஒரு கிராமம். அந்தக் கிராமத்தில் குளிக்கும்படியான ஒரு குளம். இரண்டு உத்தியோகஸ்தர்களின்பெண் ஜாதிகள் அந்த ஊருக்குப் போனவர்கள் அந்தக் குளத்தில் குளித்துக் கொண்டிருந்தார்கள். அதே ஊருக்கு விருந்தாளியாக ஒரு நம்பூதிரிப் பிராமணன் வந்திருந்தான். மல ஜலங்கழிவுக்குப் போய்விட்டுச் சுத்திசெய்ய, அந்தக் குளத்திற்கு அந்த நம்பூதிரியும் வந்தான். நம்பூதிரி பிராமணர்கள் சுத்திக்கு வருகையில் வேஷ்டியைத் தூக்கி கோவணத்தை ஒருகையால் தூக்கி ஆண்குறியைத் தொட்டுக் கொண்டு வருவார்கள். அவனும் அப்படி வந்தான். குளிக்கும் பெண்களின் வேலைக்காரன், பெண்களுக்குப் பந்தோபஸ்தாகவிருந்தான். அவன் பெண்கள் குளிக்கிறார்கள். அங்கே போகப்படாது என்று தடுத்தான். ஏற்காமல் நம்பூதிரி போனான். அவன் தள்ளினான். நம்பூதிரிக்குக் கோபம் வந்து: தான் இறங்கியிருக்கும் நம்பூதிரியிடம் சொன்னான். அந்த நம்பூதிரி அந்த ஊர் ஜெம்மியான நம்பூதிரியிடம் சொன்னார். உடனே அந்த ஊரிலிருக்கும் நாயர்மார் குடும்பங்களெல்லாம் வீட்டைக் காலி செய்துவிட்டுப் போய்விட வேண்டுமென்று உத்தரவு போட்டான். ஜெம்மிக்குத்தான் பூமி சொந்தம். குடியிருப்பு வீடு மட்டும் குடிகளுக்குச் சொந்தம். இந்த க[illegible]

தண்டனைக்குப் பயந்து குடிகளெல்லாம் நம்பூதிரிகளைக் கெஞ்சினார்கள். நம்பூதிரிகளெல்லாம் கூட்டம் கூடி விசாரித்துப் பஞ்சாயத்து நடந்தது. குளத்தில் குளித்த இரண்டு பெண்களும், பஞ்சாயத்து சபைக்கு வந்து தெண்டம் விழுந்து, ஒவ்வொருவரும் 25 ரூபாய் குற்றம் கொடுக்க வேண்டுமென்று தீர்ப்பு கூறினார்கள். அப்படியே செய்தார்கள். பார்த்தீர்களா? வைதீகத்தின் நியாயத் தீர்ப்பு. குளத்திற்கு அலங்கோலமாகப் போன நம்பூதிரி குற்றவாளியல்ல. குளத்தில் குளித்துக் கொண்டிருந்த பெண்கள் குற்றவாளிகள். வைதீகத்தில் குற்றம் செய்கிறவர்கள் குற்றவாளிகளல்ல. குற்றத்தை சொன்னவர்கள் குற்றவாளிகள். இந்து ராஜாங்கமாகவிருந்தால் அந்தப் பெண்களைக் கொன்றிருப்பார்கள். பண்டைய மதசம்பிரதாயம், வருணாஸ்ரம தருமம், சனாதன தருமம், இந்து கலாச்சாரம், இந்து தருமம் என்று அவைகளுக்குப் பெயர். குற்றத்திற்குக் காரணமாகவிருக்கும் கற்பனைத் தெய்வங்கள் ரிஷிகள், பிராமணர்கள், சாஸ்திரங்கள் குற்றவாளிகளல்ல. அதைச் சொல்லுகிறவர்கள் குற்றவாளிகள். வகுப்புத் துவேஷிகள். கடவுளையும், சாஸ்திரங்களையும் நிந்திப்பவர்கள். ஆலோசித்துப் பார்த்து திராவிட கழகத்தைக் குற்றம் சொல்லுங்கள். இந்த சம்பவம் 20 வருடங்களுக்குமுன் நடந்தது. அப்பொழுதே இதைக் குடிஅரசில் எழுதியிருக்கிறேன்.

சனகாதி ரிஷிகள் வைகுண்டத்திற்கு வருகையில், ரிஷிகள். அரண்மனைக்குள் போகையில் ரிஷிகள். தடுக்கையில், சாபம் கொடுக்கையில், விஷ்ணு வந்து வணங்குகையில் ரிஷிகள். காவற்காரர்களுக்கு விஷ்ணு ஆறுதல் சொல்லுகையில் பிராமணர்களாகிவிடுகிறார்கள். பிராமணர்கள் கொடுத்த சாபத்தை என்னாலும் தடுக்க முடியாதென்று விஷ்ணு சொல்லுகிறார். ஏன்? பிராமணர்கள் மேன்மையை நம்பிச் சாபத்திற்குப் பயந்திருப்பதற்கு இதுசாஸ்திர ஏமாற்று.

---

[2ம் பக்கத் தொடர்ச்சி]

செய்யப் போகும் வழக்கத்தையும், திருவாரூர் கமலாலயக் குளத்தில் வருடந் தவறாமல் பங்குனி உத்திரத்தன்று முழுகுவதற்குப் போவதையும் நிறுத்திக் கொண்டார்கள். ஆகவே முதியோருக்கு கல்வி அறிவிப்பது மிகஅவசியமும் அவசரமுமான காரியமாகும். சங்கத்தில் சாதி வித்தியாசங்களை ஒழிக்கவும், தாழ்ந்த சாதி என்று அழைக்கப்படும்எந்த ஒருவகுப்பினரோடும் நாம் தோழமை கொள்ளவும் வேண்டும்.

சகல பெண்மணிகளையும் சகோதரத்துவத்துடன் நடத்த வேண்டும். நமது முன்னேற்றத்தையும், கட்டுப்பாட்டையும், சமத்துவத்தையும் கண்டு உயர் குலம் என்று சொல்லப்படும் பிறஇனப் பெண்கள் பொறாமைப் படவேண்டும். இந்தப்படிநாம் முன்னேற ஆரம்பித்தால், வைதீகக் கோட்டைகள் தானாக சரிந்துவிடும். உலக வரலாற்றிலே நமது இனத்துப் பெண்கள் முதலிடம் பெறமுடியும். மேலும் ஊருக்கொரு மாதர் சங்கம் ஏற்படுத்தினால், கிராமத்திலே ஒன்றுமே அறியாமல், பாமரப் பெண்டிராக இருக்கும் நமது இனத்துப் பெண்களை ஒவ்வொரு துறையிலும் ஊக்குவிக்க முடியும்.

மற்றும் பட்டி தொட்டிகளில் உள்ள பெண்கள் வீட்டுச் சிறையில் வாடிக்கிடக்கும்வழக்கத்தைச்சாட பட்டண வாசங்களிலுள்ள நமது திராவிடத் தோழியர்கள் படையெடுத்து, கிராமப் பெண்களின் விலங்கை அறுத்தெறிய முற்பட்டு ஒவ்வொரு கிராமத்திற்கும் சென்று பெண்களிடையே புரட்சி தோன்றும் வகையில், சொற்பொழிவாற்றி, பெண்கள் வீட்டுச் சிறையில் அடைபட்டுக் கிடப்பது அடிமைத்தனம், முட்டாள்தனம், என்ற உணர்ச்சியை ஊட்டி, சிறை வாழ்க்கையை அறுத்தெறிய அவசரமாகமுற்பட்டால் தான்பெண்ணடிமை போகவும், நாடு முன்னேற்ற மடையவும் ஏதுவாக இருக்கும். ஒவ்வொரு ஊரிலும், நமது பிரசாரத்தினாலும்கூட பலன் ஏற்படாவிட்டால்—கிராமத்தில் பெண்களை வீட்டுச் சிறையில் அடைக்கும் பழக்கத்தை அவர்கள் பெற்றோர்கள் கைவிடாவிட்டால், நமது திராவிடத் தோழியர்கள், ஆங்காங்கே, கூட்டம் போட்டு, பெண்களை வீட்டுச் சிறையில் அடைக்கும் கொடிய பழக்கத்தைக் கண்டித்து ஆவன செய்யுமாறு, அமைச்சர்களுக்குத் தந்தி மூலம் தெரிவிக்கவேண்டும். அப்படியும் பெண்கள் நிலைமை கவனிக்கப்படாவிட்டால், தமிழாசிரியர்கள் துக்க வாரம் கொண்டாடியது போல், பெண்கள் புரட்சி வாரம் கொண்டாடி, கோரிக்கை நிறைவேறும் வரை கிளர்ச்சி செய்தே ஆகவேண்டும். இந்தச் சமயத்திலே நாம் சிறை புகும் கட்டம் வந்தாலும் அஞ்சத்தேவையில்லை!

நமது கோரிக்கைக்கு ஆதரவு பெண்களிடமிருந்து மட்டுமல்ல! பல சீர்திருத்த ஆண்களிடமிருந்து கூடக் கிடைக்கும். நிச்சயமாகக் கிடைக்கும்! நமது படை வரிசையை முன்னின்று நடத்தத் தோழியர் குஞ்சிதம் அம்மையார் போன்ற தலைவிமார்கள் முன்வருவார்கள். ஆகவே இனியும் நாம் ஏமாளிகளாக இருக்கத் தேவையில்லை. கிளம்புதுகாண் சிங்கக்கூட்டம், என்ற பாரதிதாசன் அவர்களின் காவியம், ஆண்களுக்குமட்டுமல்ல! அது பெண்களுக்குந்தான் என்பதை நாம் செயலளவில் காட்டவேண்டும். நம்மை ஆண்கள் முன்னேற விடமாட்டார்கள்.

ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

நாம் முன்னேறிவிட்டால், அவர்கள் தர்பாருக்கு நாம் அடங்கமாட்டோம் என்று அவர்களுக்கே தெரியும். தன் சுயநலத்துக்காக நாட்டின் முதுகெலும்பான பெண்ணினத்தை அவர்கள் நசுக்கி வைத்திருக்கிறார்கள். அவர்கள் பேரிலும் தப்பில்லை. ஏசு மொழிந்தது போல், அவர்கள் செய்வதறியாது செய்கிறார்கள். அவர்களின் குற்றத்தை அவர்களே உணரும் காலம் விரைவில் வரும். ஆனால் இப்போது உணரப்போவதில்லை. பெண்கள் கொஞ்சம் முன்னேறி விட்டால், உனது முன்னேற்றமெல்லாம் இந்த நான்கு சுவர்க்குள்ளேயேதான் இருக்க வேண்டும், என்று எச்சரிக்கும் பத்தாம் பசலி ஆண்கள் கூட்டத்தில்தான் நாம்இன்று இருக்கிறோம். ஆகவே ஒவ்வொரு தோழியர்களும், தனக்குத் தானே துணை என்ற வீரத்துடன் கிளம்ப வேண்டும்.

சமீபத்தில் கம்யூனிஸ்ட் தோழியர் கே. மணி அம்மையாரோடு பேசும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. ஏதேதோ பேசிக்கொண்டிருந்து விட்டுக் கடைசியாகக் கேட்டேன். என்னவோ தீவிரமாக உழைக்கிறீர்கள்! ஆனால் அடுப்பங்கரையிலேயே அடைபட்டுக் கிடக்கும், பெண்ணினத்தை முன்னேற்ற உங்கள் கட்சியில் திட்டம் ஒன்றும் இல்லையா? என்று! உண்டு இந்த வேலைகள் (கிசான்) ஒரு வழியாகத் தீர்ந்தவுடன், அடுத்த போராட்டம் பெண்களின் அடிப்படை உரிமைக்காகத்தான் என்றார்! ஆனால் அவர் கூறி இன்றைக்கு இரண்டு வருடங்களாகிறது. பெண்கள் நிலைமையிலே எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை.

ஆகவே தோழியர்களே! நமது உரிமைக்காக நாம் உடனடியாக உழைக்க வேண்டும். பிறர் மீது குற்றஞ் சொல்வதிலும், பண்டையப்பெண்மணிகளின் பெருமையைப் பேசுவதிலும் ஒன்றும் பலனில்லை! உடனடியாக நாம் சங்கங்கள் அமைத்து மேற்கண்டவாறு முன்னேற்ற வேலைகளைத் துவக்க வேண்டும். எதிர்காலத் திராவிடம் நம் கையில் தான் இருக்கிறது. அதாவது வீரப்புதல்வர்களையும், வீராங்கனைகளையும் பெற்றெடுக்கும் பாக்கியம் பெற்றவர்கள் நமது பெண்மணிகளே ஆகும். ஆகவே பெண்களாகிய நாம் அடிமைத்தளையிலிருந்து விடுபட்டு சீர்திருத்த முறையில் நமது மனத்தையும் பண்படுத்திக் கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட பெண்மணிகளுக்குப் பிறக்கும் குழந்தைகளே, எதிர்காலத் திராவிடத்தைச் செப்பனிடும் சிற்பியாக இருக்க முடியும். ஒவ்வொரு ஊரிலும் திராவிட மாதர் சங்கம் இருந்தால், பெண்கள் பலரும் பண்பட்டுப் போக இயலும். ஆகவே ஆங்காங்கே சங்கங்கள் அமைக்க ஒவ்வொரு தோழியர்களும் முன்வரவேண்டும்!


K. R. ராமசாமியின்

கிருஷ்ணன் நாடக சபா.

28—2—48 முதல் 2 வது வாரம்.

திருச்சி

ரத்தினவேலுத் தேவர் ஹாலில்

அறிஞர், C. N. அண்ணாத்துரை M. A., எழுதிய

சிந்தனைச் சித்திரம்


வேலைக்காரி

நாடகம்.

தினசரி இரவு 10-மணிக்கு ஞாயிறு மாலை 6-30-க்கு

திங்கள் நாடகமில்லை.

டிக்கட்: 3-0-0, 2-0-0, 1-3-0, 0-12-0, 0-6-0.


மக்களாட்சி.

(கவிதை நூல்)

ஆசிரியர்: என். இ. பாலகுரு.

விலை அணா 0-4-0.

அர்ச்சுனன் நிலையம், ஈரோடு

மக்களாட்சி புரியவேண்டுமென்றால், மக்களுக்கு எந்தெந்த நல்லியல்புகள் இருக்கவேண்டும் என்று ஆசிரியர் கருதினாரோ அவைகளைக் கூறி அவற்றால் விளையும் பயன்களையும் சித்திரித்திருக்கிறார்.

நன்றிகெட்ட மன்னன்—அவன் காலை நக்கியுண்ணும் ஆரியர். இவர்களின் கூட்டுறவால் உழைப்பாளியின் படுகொலை. இப்படுகொலையின் எதிரொலி மக்களாட்சி. இதுவே ஆசிரியர் கண்ட கனவு.

எளிய நடையில் எவரும் அறிந்து இன்புறும் வகையில் இயற்றப்பெற்றிருக்கிறது.

ஆரம்பக் கல்வி.

(மாத இதழ்)

ஆசிரியர்: பி. வீரராகவன்.

விலை அணா 0-4-0.

94-95 புதுத்தெரு,

மண்ணடி, சென்னை 1.

ஆரம்ப ஆசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை மானேஜர்கள் முன்னேற்றத்தை நோக்கமாகக் கொண்டு சென்ற 9 ஆண்டுகளாக உழைத்துவரும் மாத இதழ். இதனுள் கல்வித் துறை குறித்த பல கட்டுரைகளும் சர்க்கார் அறிக்கைகளும் காணப்படுகின்றன. பிப்ரவரி இதழ் உத்தமர் காந்தியாரின் உருவைத் தாங்கி, மதவெறியைக் கடுமையாக ஒழிக்கவேண்டுமென வற்புறுத்தியிருக்கிறது. ஆரம்ப ஆசிரியர்கள் மத உணர்வைப் பள்ளியில் வளர்க்காதிருக்க, இத்துறையில் மேலும் பல நல்ல அறிவுரைகளை ஆரம்ப ஆசிரியர்களுக்கு வழங்குதல் நல்லது.

Edited, Printed and Published by N. Karivaradaswamy at the Tamilian Press 42, Cutchery street, ERODE.

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை